கருநாடக அரசு

சுற்றுச்சூழல் கல்வி

ENVIRONMENTAL STUDIES

பயிற்சியுடன் கூடிய பாடப்புத்தகம்

TEXT CUM WORK BOOK

(புதுப்பிக்கப்பட்டது - **REVISED**)

PART-2

தமிழ் வழி

TAMIL MEDIUM

4

நான்காம் வகுப்பு

FOURTH STANDARD

@KTBS
NOT TO BE REPUBLISHED

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)

6th Cross, Malleshwaram,

Bengaluru - 560 003.

W9N7Z7

பொருளடக்கம்

வரிசை எண்	பாடம்	பக்க எண்
13.	அற்புதமான எந்திரம் – மனித உடல்	1 - 11
14.	போக்கு வரவு விதிகள்	12 - 20
15.	கடந்து வந்த பாதை மற்றும் போக்குவரத்து	21 - 30
16.	மாற்ற மடைந்து வரும் குடும்பங்கள்	31 - 39
17.	இல்லமே முதல் பள்ளிக்கூடம்	40 - 45
18.	ஒவ்வொருவரின் சிறப்பு	46 - 53
19.	தொழில் சிறப்பு	54 - 59
20.	விழாக்கள் – கொண்டாட்டம்	60 - 67
21.	கோ	68 - 79
22.	வசதிகள் – மேம்பாடு (முன்னேற்றம்)	80 - 85
23.	ஆடை – வடிவமைப்பு	86 - 92
24.	மேகத்தின் பயணம்	93 - 104
25.	நமது மாநிலம் – நமது பெருமை	105 - 118

© KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 13

அற்புதமான எந்திரம் - மனித உடல்

R6X9T7

இவ்வலகைக் கற்றபின் நீ,

- உடலில் நடைபெறும் இயக்கச் செயல்கள் மற்றும் அவற்றிற்குத் தொடர்புடைய முக்கிய உறுப்புகளை அறிந்து கொள்வாய்.
- இவ்வுறுப்புக்களைச் சுகாதாரமாகப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தூய்மையான பழக்கங்களை அறிந்து கொள்வாய்.
- சிறந்த சுகாதார முறைகளை அறிந்து கொள்வாய்.

ஐம்புலன்கள் மற்றும் அவற்றின் வேலைகளைப் பற்றிக் கடந்த வகுப்பில் படித்தவற்றை நினைவு கூறுங்கள். பின்வரும் பட்டியலில் ஐம்புலன்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கோடு வரைந்து பொருத்துக.

அ	ஆ
கண்	வாசனையை அறிய உதவுகிறது
காது	சுவைக்க உதவுகிறது.
மூக்கு	பொருட்களைக் காண உதவுகிறது
நாக்கு	வெப்பம், குளிர்ச்சி முதலிய உணர்ச்சிகளை அறிய உதவுகிறது.
தோல்	கேட்பதற்கு உதவுகிறது.



இந்த உறுப்புகளனைத்தையும் நாம் காண இயலும். நமது உடலின் உட்புறத்திலும் சில உறுப்புக்கள் உள்ளன. அவற்றை நாம் காண இயலாது. அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

உன்னுடைய தோலைப் பார். அதனடியில் தசைகள் மற்றும் எலும்புகள் உள்ளன. இவை உனக்குக் காண இயலுவதில்லை. இவற்றின் மீது போர்வையைப் போன்று இருக்கும் தோல் நமது உடலைப் பாதுகாக்கிறது. எலும்புகள் மற்றும் தசைகள் சேர்ந்து நமது உடலிற்கு வடிவம் மற்றும் அழகைக் கொடுக்கின்றன. உனது உடலின் வடிவம் மற்றும் அழகிற்கும், உன்னுடைய நண்பர்களின் உடல் வடிவம் மற்றும் அழகிற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன கவனி.

©KTBS NOT TO BE REPUBLISHED

நமது உடலில் பல்வேறு செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சுவாசித்தல், சீரணச்செயல், இரத்த ஓட்டம் மற்றும் கழிவு வெளியேற்றம். உடல் இயக்கச் செயல்கள் நமது உடலை உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கின்றன. உடலிலிருக்கும் வெவ்வேறு உறுப்புகள் பற்றியும், அவை ஈடுபடுகிற செயல்களைப் பற்றியும் தெரிந்து கொள்க.

சுவாசித்தல்

குழந்தாய், நீ மூக்கின் மூலமாக காற்றை உள்ளிழுத்துக் கொள்வாய் என்பதை தெரிந்து கொண்டிருப்பாய்.

செய்து பார்

உனது கையை இருதயத்தின் மீது வைத்துக் கொள். மூக்குத் துளை மூலமாக காற்றை மெதுவாக உள்ளிழுத்துக் கொள். அவ்வாறே மெதுவாக காற்றை வெளியேற்று. இருதயத்தின் மீது வைத்துள்ள கையில் எத்தகைய உணர்வு ஏற்பட்டது?



படத்தைப் பார் காற்று உடலின் சில உறுப்புகள் மூலமாக உட்சென்று, அதே உறுப்புக்கள் மூலமாக வெளியேறுகிறது. அதனால் இருதயத்தின் மீதுள்ள கையிலும் ஏறியிறங்குகிற உணர்வு ஏற்படுகிறது. படத்தில், காற்று உட்சென்று வெளியேறுகிற வழி மற்றும் உறுப்புகள் காண்பிக்கப் பட்டுள்ளன. அவற்றை வரிசை முறையில் எழுதுக.

1. ____________

2. ____________

3. ____________

நமது உடலிற்குத் தேவையான **ஆக்ஸிஜன்** காற்றில் உள்ளது. காற்றிலுள்ள ஆக்ஸிஜனை நுரையீரல்கள் ஈர்த்துக் கொள்கின்றன. அங்கு சேகரிக்கப்பட்டிருக்கும் நமது உடலிற்குத் தேவையற்ற **கார்பன் - டை ஆக்ஸைடு** நுரையீரல் மற்றும் மூக்கின் வழியே உடலிலிருந்து வெளியேறி காற்றில் கலந்து விடுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

இவ்வாறு ஆக்ஸிஜனை உள்ளிழுத்துக் கொண்டு கார்பன்டை ஆக்ஸைட் வெளியேற்றுகிற செயலை **''சுவாசித்தல்''** என்பார்கள்.

சுவாசித்தலுக்கு தீங்கு விளையாதவாறு சுகாதார முறைகளை வளர்த்துக் கொள். இங்கு கொடுக்கப் பட்டுள்ளது.

படித்துத் தெரிந்து கொள்:

- குளிக்கையில் மூக்குத்துளைகளைச் சுத்தம் செய்யவும்.
- உறங்குகையில் முகத்தை மூடி படுக்க வேண்டாம்.
- தூசு மிகுதியான பகுதிகளில் நடந்து செல்கையில் மூக்கில் தூசு சேராதவாறு எச்சரிக்கை வகிக்கவும்.
- விரைவாக உணவு உட்கொள்ளவோ, நீர்குடிக்கவோ கூடாது.
- அடர்த்தியான புகையிருக்கிற பகுதிகளுக்குச் செல்லக்கூடாது. புகையை சுவாசித்தால், நுரையீரல் தொடர்பான இடையூறுகள் நேருகிறது.
- நாள்தோறும் ஒரு முறையாவது, நிமிர்ந்து உட்கார்ந்து பத்து முறை ஆழ்ந்து சுவாசித்தலைப் பயிற்சி செய்யவும்.
- குச்சி, பேனா, பலப்பம் முதலிய பொருட்களை மூக்கின் துளையில் போடக்கூடாது.
- வாயின் மூலமாக சுவாசிக்கக் கூடாது.
- இருமல் அல்லது தும்முகையில் வாயின் குறுக்காக கைக்குட்டையைப் பிடித்துக்கொள். இருமல், தும்மல் இருக்கையில் வாயின் வழியாக கிருமிகள் காற்றில் கலக்காதவாறு தடுக்கலாம். இதனால் இருமல் அல்லது தும்மல் மற்றவர்களுக்குப் பரவுவதைத் தடுக்க இயலும்.

இரத்த ஓட்டம்



இப்படத்தைக் கவனி. இதன் பெயரை இங்கே எழுது.

உடலின் எந்த ஒரு பாகத்திலும் காயம் ஏற்பட்டால், இரத்தம் வருவதை நீ பார்த்திருக்கிறாய். இரத்தத்தின் நிறம் என்ன? இங்கே எழுது.

© KTBS NOT TO BE REPUBLISHED

உடலின் அனைத்து பாகங்களிலும் இரத்தம் பாய்ந்து கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா? உடலின் அனைத்து பாகங்களுக்கும் இரத்தத்தை பாய்ச்சுகிற முக்கிய உறுப்பே இருதயம்.

செயது பார்க்க:

உனது இடதுகை விரல்களை மடித்து முஷ்டி பிடிக்கவும். உனது இடது கைப்பிடி அளவே இருதயத்தின் அளவாகும்.

நுரையீரலைப் பற்றி நீ ஏற்கனவே அறிந்து கொண்டிருக்கிறாய். அவற்றின் இடையில் சிறிது இடதுபக்கம் இருதயம் அமைந்துள்ளது. மார்புக் கூடு இருதயத்தைப் பாதுகாக்கிறது.

கிணற்றிலிருந்து நீரை பம்பின் துணையுடன் உயரமான குழாய்களின் வழியாக பாய்ச்சுவதை நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா? இருதயமும் பம்பைப் போன்றே வேலை செய்து, இரத்தத்தை இரத்த நாளங்களின் மூலமாக உடலின் எல்லா பாகங்களுக்கும் அனுப்புகிறது.

செய்துபார்க்க:

உனது நண்பரின் மார்பின் மீது கையை வைக்கவும். இருதயம் லப்-டப் என்று துடிப்பதை உணரவும். இருதயம் இரத்தத்தைப் பம்ப் செய்கையில் லப்-டப் துடிப்பை உணரலாம்.

நமது உடலின் அனைத்து பாகங்களிலும் இரத்தம் பாய்கிறது. இது உடலின் பாகங்களிலிருந்து கார்பன்டை ஆக்ஸைடு பெற்று அசுத்தமடைகிறது. இவ்வாறு அசுத்தமடைந்த இரத்தமானது இரத்த நாளங்கள் மூலமாக இருதயத்தை வந்தடைகிறது.

இருதயத்திலிருந்து இரத்தம் நுரையீரல்களை அடைகிறது. அங்கே அது கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியேற்றி ஆக்ஸிஜன் பெற்று சுத்தமாகிறது. சுத்தமான இரத்தம் இரத்த நாளங்கள் மூலமாக மீண்டும் இருதயத்தை வந்தடைகிறது. இருதயத்திலிருந்து, ஆக்ஸிஜன் பெற்ற இரத்தம், இரத்த நாளங்கள் மூலமாக உடலின் எல்லா பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இதுவே இரத்த ஓட்டம் எனப்படுகிறது.

இதயத்துடிப்பை மருத்துவர் எவ்வாறு பரிசோதிப்பார்? நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

© KTBS NOT TO BE REPUBLISHED

இருதயத்துடிப்பை சோதிக்க மருத்துவர் பயன்படுத்திகிற கருவியின் படம் இங்கே உள்ளது. இதன் பெயரை எழுதுங்கள்.



செய்து பார்க்க:

மூன்று பிளாஸ்டிக் குழாய்கள், ஒரு T வடிவக் குழாய், புனல் வடிவப் பொருள், பிளாஸ்டிக் காகிதம் மற்றும் இரப்பர் கற்றைகள் (இரப்பர் பேண்டு), இவற்றைப் படத்தில் காட்டியுள்ளவாறு இணைக்கவும். தற்பொழுது ஸ்டெத்தஸ்கோப் தயார்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

ஸ்டெத்தாஸ்கோப்பின் புனல் வாயை உனது நண்பனின் மார்பின் மீது வை உன்னுடைய காதுகளில் இரண்டு குழாய்களையும் வைத்துக் கொண்டு இதயத் துடிப்பைக் கணக்கிடு.

இதயம் ஒரு நிமிடத்திற்கு எத்தனை முறை துடிக்கின்றது. உனது கையை மார்பின் மீது வைத்து இதயத் துடிப்பைக் கணக்கிடு.

உனது உடலில் இரத்த ஓட்டம் சீராக நடைபெறுவதற்கு காய்கறி மற்றும் பழங்களை ஒழுங்காக உட்கொள்ள வேண்டும். நாள்தோறும் உடற்பயிற்சி செய்வதைப் பழக்கப் படுத்திக் கொள்ளவும்.

செரிமானச் செயல் (சீரணமாதல்)

நாள்தோறும் நீ உணவு உட்கொள்கிறாய் அல்லவா? அது எங்கு செல்கிறது? என்னவாகிறது? உனக்குத் தெரியுமா?



அருகிலிருக்கும் படத்தைக் கவனி. நீ உட்கொள்ளும் உணவு வாய் வழியாக குறிப்பிட்ட உறுப்புகளை கடந்து செல்கின்றது. இவ்வுறுப்புகள் யாவை என்பதை படத்தைப் பார்த்து இங்கே எழுதுக.

1.

2.

3.

4.

5.

6.

7.

உறுப்புகளின் பெயர்களை எழுதினாயல்லவா? உனது வாயின் பாகங்களைப் பெயரிடுக.

____

உணவை மெல்லுவதற்கு துணைபுரியும் உறுப்பு எது?

____

நாக்கின் வேலை என்ன?

____

வாயின் வழியாக நீ உட்கொண்ட உணவினை பற்கள் அரைத்து சிறு துகள்களாக்குகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

மிருதுவாக்கப்பட்ட உணவு
உணவுக்குழாய் வழியாக
இரைப்பையை அடைகிறது.



உணவு இரைப்பையில் அதிகளவு
செரிமானமாகிவிடுகிறது. உணவு சுமார் 3 மணி
நேரம். வரை இரைப்பையில் தங்குகிறது.

இவ்வுணவு பிறகு சிறுகுடலை அடைந்து மேலும்
செரிமானமாகிறது. செரிமானமான உணவு
சிறுகுடலின் மூலம் இரத்தத்தில் கலந்து, உடலின்
அனைத்து பகுதிகளையும் வந்தடைகிறது.





செரிமானமாகாத உணவு பெருங்குடலை
அடைந்து மலமாக உருமாறி மலத்துவாரம்
மூலமாக வெளியேறுகிறது.

உணவு செரிமானமாகி இரத்தத்தில் கலக்கும் செயலை **'செரித்தல்'** என்பர்.

© KTBS
NOT TO BE REPUBLISHED

விளையாடி மகிழ்

செரிமானச் செயலில் பங்கேற்கும் உறுப்புகளின் பெயர்களை எழுதி ஒரு டப்பாவில் போடு. ஒவ்வொரு துண்டிளையும் எடுத்துக் கொள்ளுமாறு உன் நண்பர்களுக்குக் கூறவும். அத்துண்டில் எழுதியுள்ள உறுப்பின் ஒரு செயலை (வேலையை) தெரிவிக்க. விளையாட்டை இவ்வாறு தொடரவும். தேவையெனில் ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

படித்துத் தெரிந்து கொள்

சிறந்த உணவுப் பழக்கங்கள்

- உணவு உண்பதற்கு முன்னும் பின்னும் கை கால்களைச் சுத்தம் செய்யவும்.
- பீன்ஸ், முள்ளங்கி போன்ற நார் பொருட்களுள்ள உணவு வகைகளை உட்கொள்ளவும்.
- தூய்மையான மற்றும் ஆரோக்கியமான உணவினை உட்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு முறை உணவு உட்கொண்ட பிறகும் வாய், பற்கள் மற்றும் நாக்கினைச் சுத்தப் படுத்தவும்.
- உணவினை மெதுவாக, நன்றாக மென்று உண்ணவும்.
- உணவு உட்கொள்கிற நேரங்களுக்கான இடைவேளை மூன்றிலிருந்து நான்கு மணி நேரங்களிருத்தல் சிறந்தது.

பின்வரும் படங்களில் குறிப்பிட்டுள்ள உறுப்புகளின் வேலைகளை, அதன் (முன்பாக காட்டப் பட்டுள்ள) இடங்களில் எழுது.



©KTBS NOT TO BE REPUBLISHED





@KTBS
NOT TO BE REPUBLISHED

கழிவு வெளியேறும் செயல்:

வீட்டில் நடைபெறுகிற செயல்களினால் குப்பை உண்டாகிறது. இக்குப்பையை நாம் நாள்தோறும் அப்புறப்படுத்துகிறோம். அவ்வாறே நமது உடலுக்குத் தேவையில்லாத சில பொருட்கள், செரித்தல் போன்ற செயல்களினால் உடலின் பல பாகங்களில் உற்பத்தியாகின்றன. அவையே கழிவுகளாகும்.

நமது உடலில் உண்டாகும் கழிவுகள் உடலிலேயே தங்கிவிட்டால் நமது உடல் பல நோய்களுக்கு உள்ளாகிறது. எனவே, நமது உடல் தன்னுள் உற்பத்தியாகிற கழிவுகளை தோல், நுரையீரல்களின் மூலமாக வெளியேற்றுகிறது, என்பது உங்களுக்குத் தெரியும். இவை கழிவு உறுப்புகளாகும்.

நமது உடல் சிறுநீர் மூலமாகவும் கழிவுகளை வெளியேற்றுகிறது. இதற்குத் துணைபுரிகின்ற கழிவு உறுப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.



மேற்கண்ட படத்தைக் கவனிக்கவும். அதன் பாகங்களை இங்கே எழுதுக.

1) ____________________

2) ____________________

3) ____________________

4) ____________________

முதுகுத் தண்டின் இருபுறங்களிலும் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. இவை இரத்தத்தை வடிகட்டி, உடலுக்குத் தேவையற்ற பொருட்களை திரவவடிவில் சேகரித்து வைக்கும். இக்கழிவுகள் சிறுநீர்க்குழாய் வழியே சிறுநீர்ப்பையை வந்தடைகின்றன. பிறகு சிறுநீர் வடிகுழாய் மூலமாக சிறுநீராக, உடலிலிருந்து கழிவுகள் வெளியேறுகின்றன.

வினாக்களுக்கு விடையளிக்க

உடலிலிருந்து கார்பன்டை ஆக்ஸைடு வெளியேற்றும் உறுப்பு எது?

____

வியர்வை மூலம் கழிவுகளை வெளியேற்றும் உறுப்பு எது?

____

நீர்மவடிவில் கழிவுகளை வெளியேற்றும் உறுப்பு எது?

____

@KTBS NOT TO BE REPUBLISHED

படித்துத் தெரிந்து கொள்

- சிறுநீரை ஒழுங்காக வெளியேற்றவும்.
- நாள்தோறும் குளித்து, தூய்மையான ஆடையை அணியவும்.
- அவ்வப்பொழுது கை-கால்களையும், முகத்தையும் சுத்தமாகக் கழுவவும். இவ்வாறு செய்வதால், வியர்வை மூலமாக வெளியேற்றப்பட்டு, சேகரமாகிற கழிவுகள் கழுவப்படுகின்றன. தோல் தூய்மையாகி, வியர்வைத் துளைகள் நன்றாகத் திறந்து கொள்கின்றன.
- நாள்தோறும் 2 லிட்டர் அளவு தண்ணீரைக் குடிக்க வேண்டும். இதனால் வியர்வை மற்றும் சிறுநீர் மூலமாக கழிவுகள் உடலிலிருந்து வெளியேறுகிறது.

சுவாசம், இரத்த ஓட்டம், கழிவுவெளியேற்றம் மற்றும் செரித்தல் வேலைகளைச் செய்கிற நமது உடல் அதிசய எந்திரத்தைப் போன்றது என்பதை அறிந்து கொண்டாய். உனது உடல் சரியாக வேலை செய்யவேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பதை படித்து, அறிந்துகொள்.

படித்துத் தெரிந்து கொள்

- குறிப்பிட்ட வேளையில் உணவு உட்கொள்ளுதல், மலம் - சிறுநீர் கழித்தல், முதலியவற்றைப் பழக்கப் படுத்திக் கொள்.
- நாள்தோறும் விளையாடு, உடற்பயிற்சி செய், முடிந்தளவு நடக்கப் பழக்கப் படுத்திக் கொள்.
- மிதமான உணவை உட்கொள்ளவும். பொரித்த உணவுப் பொருட்கள், இனிப்புப் பண்டங்களை மிகுதியாக உட்கொள்ளக் கூடாது.
- நாள்தோறும் குளித்து, உடலைத் தூய்மையாக வைத்துக் கொள். அன்றாடம் துவைத்த, தூய்மையான ஆடைகளை அணியவும்.

அறிந்துக் கொள்க:

- நமது உடலில் 206 எலும்புகள் உள்ளன. 600-ஐ விட அதிகமான மூட்டுகள் உள்ளன.
- நீ மூன்று அடி உயரமிருந்தாலும், உனது உடலிலுள்ள செரிமான உறுப்புகள் 21 அடி நீளமாகிருக்கின்றன. அவை சுருளாகச் சுற்றிக் கொண்டிருக்கும்.
- உன்னுடைய இதயம் நிமிடத்திற்கு எழுபது தடவை துடிக்கிறது நாளொன்றுக்கொரு லட்சம் தடவை துடிக்கிறது.
- நுரையீரல்களில் சுமார் 3 லிட்டர்கள் அளவு காற்று நிறைந்திருக்கும்.
- மனிதனின் உடலில் சுமார் 5.5 லிட்டர்கள் அளவு இரத்தமிருக்கும்.
- ஒரு முறை இரத்ததானம் செய்த பிறகு, உடலில் மீண்டும் இரத்தம் உற்பத்தியாகிறது. இதற்கு 4 முதல் 5 வாரங்கள் தேவைப்படுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

B4M4Q6

அலகு - 14

போக்குவரவு விதிகள்

இவ்வலகைக் கற்றபின் நீ,

- போக்குவரத்து சமிக்ஞைகள், பாதுகாப்பு விதிகள் மற்றும் அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி அறிந்து கொள்வாய்.

நீ சாலையில் நடந்து செல்லும்போது அல்லது வாகனங்களில் செல்லும்போது சாலைகளின் ஓரங்களில் பல பலகைகளைப் பார்த்து இருப்பாய். அவைகளை ஏன் அமைத்துள்ளார்கள் என்பது உனக்குத் தெரியுமா? கீழ்க்காணும் படக்கதையைப் படி.

சவிதா: பாத்திமா, நீரஜ், மேரி மற்றும் அவர்களுடைய ஆசிரியர் நகரத்தின் சாலை நடைப்பாதையில் நின்று கொண்டுள்ளனர். போக்கு வரத்துக் காவலர் (போலிஸ்) வாகனங்களின் போக்குவரவை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

@KTBS NOT TO BE REPUBLISHED



அதே சமயத்தில் மற்றொரு போக்குவரத்துக் காவலர் அவர்களின் அருகில்வந்தார். ஆசிரியர் அவரிடம் தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

அப்பொழுது நீரஜ் சாலை அறிவிப்பு விளக்கைப் பார்த்தான்.



@KTBS NOT TO BE REPUBLISHED

அதே நேரத்தில் சாலை அறிவிப்பு சிவப்பு விளக்கு எரிந்தது. ஆசிரியர் மற்றும் குழந்தைகள் கடக்க வேண்டிய சாலையில் வாகனங்கள் நின்றன.



அனைவரும் ஜீப்ரா பட்டைகளின் மூலம் சாலையைக் கடந்து சென்றனர்.

NOT TO BE REPUBLISHED

பாதுகாப்பு விதிகளை அறிந்து குழந்தைகள் மகிழ்ச்சி, அடைந்தனர். பள்ளியைநோக்கிச் சென்றனர்.

படக் கதையை படித்தீர்கள் அல்லவா? சவீதா, ஃபாதிமா, நீரஜ் மற்றும் மேரி சாலையின் பக்கங்களில் அமைக்கப்பட்டுள்ள அறிவிப்புகளையும் மற்றும் அவைகளின் விதிமுறைகளையும் போக்குவரத்துக் காவலர் மூலம் கேட்டுத் தெரிந்து கொண்டனர். நீயும் அறிந்து கொண்டாய் அல்லவா? அப்படியென்றால் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளி.

- பாதசாரிகள் சாலையை எங்கு கடக்க வேண்டும்.

  ____

  ____

- அறிவிப்பு விளக்குகளில் என்னென்ன வண்ண விளக்குகள் உள்ளன?

  ____

  ____

  ____

- அறிவிப்பு விளக்குகளினால் உண்டாகும் ஒரு நன்மையை இங்கு எழுது.

  ____

- நீ பள்ளிக்கு வரும் வழியில் அறிவிப்பு விளக்குகள் உள்ளனவா?

  ____

- நீ சாலையைக் கடக்கும் போது கைக்கொள்ளும் எச்சரிக்கைகள் யாவை? ஏன்?

  ____

  ____

  ____

  ____

சாலையின் ஓரத்திலுள்ள சில அடையாளங்கள் மற்றும் அவைகளில் உள்ள குறிப்புகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன அவைகளை கோடுவரைந்து. பொருத்துக.

@KTBS NOT TO BE REPUBLISHED

அ	ஆ
	சாலையில் மேடு உள்ளது. உங்கள் வாகனத்தின் வேகத்தைக் குறைக்கவும்.
	லெவெல் கிராஸிங் கேட் திறந்துள்ளதா, மூடியுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு செயல் படவும்.
	இடது பக்கம் செயல்படுக.
	முன்னால் மருத்துவமனை உள்ளது. வேகத்தைக் குறையுங்கள்.
	வாகனங்களை நிறுத்தலாம்.
	நிதானமாக இயங்கவும்.
	பேரொலி எழுப்பக்கூடாது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

நாம் பாதுகாப்பாக சாலையில் செல்வதற்காக. உள்ள ''விதிகளே'' போக்குவரத்து விதிகள் நாமும் மற்றும் வாகனங்கள் நலமாக பாதுகாப்பாக சாலையில் செல்ல ஆங்காங்கு அறிவிப்பு மற்றும் அடையாளப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

போக்கு வரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் இரண்டு நன்மைகள் யாவை எழுதுக.

1) ______________________________

2) ______________________________

கீழ்க்காணும் அட்டவணையில் கடைப்பிடிக்க வேண்டிய சில போக்குவரவு விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றின் முன் (✓) அடையாளமிடு. தவறாக இருப்பின் (×) குறியிட்டு அதன் முன்னாலுள்ள இடத்தில் சரியானதை எழுதுவும்.

வரிசை எண்	போக்குவரத்து	சரி	தவறு	திருத்திய விடை
1.	சாலையைக் கடக்க ஜீப்ரா பட்டைகளைப் பயன் படுத்த வேண்டும்.			
2.	அறிவிப்பு விளக்குகள் இல்லாத இடங்களில் சாலையின் இட, வலது பக்கங்களில் வாகனங்கள் வரவில்லையென்றாலும் சாலையை கடக்க வேண்டும்.			
3.	தொடர் வண்டி வரும்போது இரயில்வே லெவல் கிராசிங்கை தாண்டலாம்.			
4.	சாலையின் நடுப் பகுதியில் விளையாடலாம்.			
5.	வாகனங்கள் இயங்கும் போது ஏறலாம் அல்லது இறங்கலாம்,			
6.	வரிசையில் நின்று வாகனங்களில் ஏறலாம்.			
7.	பாதசாரிகள் சாலையின் வலது பக்கத்தில் நடந்து செல்ல வேண்டும்.			

NOT TO BE REPUBLISHED © KTBS

கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகைகளை உன் ஊரில் எங்கெங்கு வைக்கலாம் என்பதை காலி இடங்களில் எழுது, ஒரு எடுத்துக் காட்டு கொடுக்கப் பட்டுள்ளது - கவனிக்க

அறிவிப்பு	வைக்க வேண்டிய இடம்
	என் பள்ளிக்கு அருகில்வைக்கவேண்டும்
	

@KTBS
NOT TO BE REPUBLISHED

படித்தறிக:

சாலை விதிகளை கடைப்பிடித்தால் நாம் இன்னல்களுக்கு ஆளாவதில்லை. சாலை விதிகளை சரியாகக் கடைப் பிடித்தால் சாலை விபத்துகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

வீட்டில் மற்றும் பள்ளியில் நடைப்பெறக்கூடிய சில விபத்துகளை நீ அறிந்துள்ளாய். **எடுத்துக்காட்டாக** மின்சார உபகரணங்கள், எரிவாயு அடுப்பு, கத்தி, பிளேடு, அரிவாமனை, போன்றவைகளை எச்சரிக்கையுடன் பயன்படுத்தவில்லையென்றால் அபாயத்திற்குள்ளாகும் நிலைமை ஏற்படும். உனக்குத் தெரிந்த 5 விபத்துகளைப் பற்றி கீழ்க்காணும் பட்டியில் எழுதுக. அதைத் தடுக்க நீ எடுக்கும் எச்சரிக்கைகள் பற்றி எழுதுக.

வரிசை எண்	**விபத்து ஏற்படும் சூழ்நிலை**	**எச்சரிக்கை**
1.		
2.		
3.		
4.		
5.		

அறிந்துக் கொள்க

- வாகனங்களின் போக்குவரத்தை உடனடியாக குறைக்க, எரிப்பொருளை மீதமாக்க மற்றும் காற்று மாசடையாமலிருக்க பெங்களூரில் '**பஸ்தினம்**' அனுசரிக்கப் படுகிறது. பஸ்தினத்தன்று சொந்தமாக வாகனங்கள் வைத்திருப்போர் அன்று பஸ்ஸிலேயே பயணம் செய்யவார்கள்.
- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் ஒரு வாரம் போக்கு வரத்துத் துறையினர் '**சாலை பாதுகாப்பு வாரம்**' அனுசரிக்கிறார்கள்.
- நகரப் பகுதிகளில் போக்குவரத்து இலாக்காவினர் பள்ளிக் குழந்தைகளுக்கு 'சாலை போக்குவரத்து விதிகள்' பற்றி பயிற்சி அளிக்கிறார்கள்.
- சாலை விபத்துகளில் ஆளானவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க, நம்முடைய மாநிலத்தில் 108 எண்ணுள்ள ஆம்புலன்ஸ் வாகனத்தை இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

Z9L3B4

அலகு - 15

கடந்துவந்த பாதை மற்றும் போக்குவரத்து

இவ்வலகைக் கற்றபின் நீ,

- போக்குவரத்தில் விலங்குகளின் பயன்பாட்டை அடையாளம் காணுவாய்.
- விலங்குகள் பற்றிய அனுபவங்களை அறிந்து கொள்வாய்.
- காலம் காலமாக மாற்றமடைந்த பல் வேறு விதமான போக்கு வரவு சாதனங்களை அடையாளம் காண்பாய்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள படங்களை கவனிக்க இங்கு காணப்படும் சிறப்புகளை எழுது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

	
	

- உன் ஊரில் விலங்குகளை போக்கு வரவிற்கு பயன் படுத்துகிறார்களா?

  ____

- எந்தெந்த விலங்குகளைப் பயன் படுத்துகிறார்கள்?

  ____

- அவைகளை எவ்வகையான வேலைகளுக்குப் பயன் படுத்துகிறார்கள்?

  ____

கீழ்க்காணும் படங்களை கவனி. போக்கு வரவில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை அடையாளம் கண்டு சரியாக வரிசைப் படுத்துக.

 ☐	 ☐

@KTBS
NOT TO BE REPUBLISHED

	
	
	

போக்குவரத்திற்கு முற்காலத்தில் பயன்படுத்திய விலங்குகளின் பெயர்களை அறிந்து எழுதுக.

போக்குவரதிற்கு இன்று பயன் படுத்தும் விலங்குகள் யாவை? அறிந்து எழுது.

போக்கு வரத்திற்கு அன்று மற்றும் இன்று விலங்குகளைப் பயன்படுத்துவதில் வேறுபாடுகள் யாவை? பெரியவர்களின் உதவியுடன் அறிந்து எழுது.

@KTBS NOT TO BE REPUBLISHED

உன் ஊரில் போக்கு வரத்திற்குப் பயன்படுத்தும் விலங்குகளை எவ்வாறு கவனித்துக் கொள்கிறார்கள் என்பதை எழுது.

____

____

____

____

____

பொருட்களைக் கொண்டு செல்ல பயன்படுத்தும் விலங்குகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை பெரியவர்களின் உதவியுடன் எழுது.

____

____

____

____

____

@KTBS
NOT TO BE REPUBLISHED



படித்து - அறிக

போக்கு வரவிற்குப் பயன்படும் விலங்குகளின் மீது அன்பையும், கருணையையும் காட்டவேண்டும்.

பொருட்களின் போக்குவரத்திற்காகப் பயன்படும் விலங்குகளின் படங்களை சேகரித்து ஒட்டுக, இல்லையெனில் வரைக.

இப்படங்களை சரியாக கவனித்துப் பார்க்கவும். அங்கு கொடுக்கப் பட்டிருக்கும் விவரங்களைப் படித்து பிறகு பொருத்துக. ஒரு எடுத்துக் காட்டு அளிக்கப் பட்டுள்ளது..



NOT TO BE REPUBLISHED @KTBS



உங்கள் ஊரின் தபால் அலுவலகத்துச் சென்று அல்லது தபால்காரரை பேட்டிக் கண்டு, கீழேக் கொடுக்கப் பட்டிருக்கும் தலைப்புக்கு ஏற்றவாறு விவரங்களை சேகரித்து எழுதுக.

தபால் தலை	
கடிதம்	
பார்சல்	
விரைவு அஞ்சல்	

@KTBS
NOT TO BE REPUBLISHED

உன் ஊரில் நடைபெறும் திருவிழாவுக்கு வருமாறு உன்னுடைய நண்பனுக்கு கடிதம் எழுதி அழைக்கவும். விலாசம் எழுதி தபால் பெட்டியில் போடு.

	பெறுநர் ________________ ________________ ________________

இங்கு கொடுக்கப் பட்டுள்ள படங்களை சரியாக கவனி. நீயும் உன் வீட்டைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் சாதனங்களுக்கு (✓) அடையாளம் இடு.

@KTBS NOT TO BE REPUBLISHED

☐	 ☐
☐	☐
☐	 ☐
☐	 ☐

முற்காலத்தில் பயன் படுத்திய மற்றும் தற்காலத்தில் பயன்படுத்தி வரும் செய்திப் போக்கு வரவு சாதனங்களைப் பற்றி பெரியவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டு எழுது.

முற்காலத்தில் பயன் படுத்திய செய்தி போக்கு வரத்து சாதனங்கள்	**தற்காலத்தில் பயன் படுத்திவரும் செய்திப் போக்குவரத்து சாதனங்கள்**

ஏதாவது வேறுபாடுகள் உள்ளனவா? கவனிக்க.

படித்து - அறிந்துகொள்

கீழ்க்காணும் படங்களைப் பார், விவரங்களைப் படி

	எழுத்துக்கள் மூலமாக தபால் அலுவலகத்தின் உதவியோடு, அனுப்பப்படும் செய்திப்போக்கு வரவு சாதனம்
	தொலைத்தூரத்தில் உள்ள பிரதேசங்களிலுள்ளவருடன் நேரடியாக செய்திகளைப் பகிர்ந்துக்கொள்ள உதவும் சாதனம்.
	அகில உலக நாடுகளின் செய்திகளை ஒவ்வொரு நாளும் படித்து அறிந்து கொள்ள உதவும் சாதனம்
	பிரதேசம், அகில உலக செய்திகள், பொழுதுபோக்கு, விளையாட்டு போன்றவற்றைப் பார்த்து, கேட்டு அறிந்து கொள்ள உதவும், வசீகரமான செய்தி தொடர்பு சாதனம்.
	பொழுது போக்குகளுடன், உள்ளூர், தேசம் அகில உலக செய்திகளை கேட்டு அறிந்து கொள்ள உதவும் சாதனம்.
	உலகின் எந்த ஒரு மூலையில் நடைபெறும் பலவிதமான விவரங்களை வெகு விரைவாக பெறலாம். அல்லது அனுப்ப வேண்டிய விவரங்களை வெகு அற்புதமான செய்தி தொடர்பு சாதனம்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பல்வேறு வகையான செய்தி போக்கு வரவு சாதனங்களின் படங்களை சேகரித்து ஒட்டுக. ஒவ்வொரு படத்தின் அடியில் அதன் பெயர் மற்றும் அதனைப் பற்றி ஒன்றிரண்டு வரிகள் எழுது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

படித்து அறிந்துகொள்

கண்டுபிடித்தனர்

• ரைட் சகோதரர்கள்	விமானம்
• கிரகம் பெல்	தொலைபேசி
• சார்லஸ் பாபேஜ்	கணினி
• ஜான் பியார்ட்	தொலைக் காட்சி
• மார்க்கோனி	ரேடியோ

அறிந்துக் கொள்க

- இரயில் (தொடர்வண்டி) போக்கு வரத்து சாதனங்களில் முதலிடத்தை வகிக்கிறது.
- முதன் முதலில் இந்தியாவின் இரயிலொன்று 1853-ல் மும்பையிலிருந்து தானே வரையில் 34 கி.மீ தூரம் இயக்கப்பட்டது.
- ஒட்டகம் மணலில் பிரயாணம் செய்ய அனுகூலமாக இருக்க அதனுடைய உடல் அமைப்பு அமைந்துள்ளது. இதனை பாலை வனங்களில் போக்குவரத்துக்கு அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள் அதனால் இதனை **பாலைவனக் கப்பல்** என்று அழைக்கிறார்கள்.
- சமுத்திரத்தின் அடிப்பாகத்தில் இயங்கும் கப்பலுக்கு ‘சப்மரைன்’ நீர் மூழ்கிக் கப்பல் என்று அழைக்கிறார்கள்.
- விண்வெளி ஓடத்தில் பூமியிலிருந்து விண்ணுக்குச்சென்று ஆய்வு செய்கிறார்கள்.
- தினந்தோறும் வரும் பத்திரிக்கை - தினசரி. ஏழு நாட்களுக்கு ஒரு முறை வரும் பத்திரிக்கை - வார இதழ், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும்பத்திரிக்கை - இருவார இதழ்.

  மாதத்தொருமுறை வரும் பத்திரிக்கை - மாத இதழ்.
- போக்கு வரவுக்கு பயன்படாத முதல் விலங்கு - நாய்
- உலகில் சில இரயில்கள் மணிக்கு 350 கி.மீட்டருக்கும் அதிகமான வேகத்தில் இயங்கக் கூடியவை. இவைகளில் பயணம் செய்தால், பெங்களூரிலிருந்து ஹுப்பள்ளிக்கு ஒரு மணி நேரத்தில் சென்றடையலாம்!

©KTBS NOT TO BE REPUBLISHED

X8W2U7

அலகு - 16

மாற்றமடைந்து வரும் குடும்பங்கள்

இவ்வலகைக் கற்றபின் நீ,

- மக்கள் ஒன்றுகூடி வாழும் நிலையில் காலம் மாற்றத்தினால்ஏற்படும் மாறுபாடுகளை அறிந்து கொள்ளவது.
- மாறுபாடுகளை வம்ச மரத்தின் மூலம் கணக்கிடுவது.

படத்தில் காட்டியுள்ளது இராமய்யா மற்றும் இராஜம்மா குடும்பத்தின் சென்ற ஆண்டின் படம். சரியாக கவனிக்க.



இந்த குடும்பத்தில் எத்தனைப் பேர் உள்ளனர்?

@TNTBS NOT TO BE REPUBLISHED

ராமய்யாவுக்கு எத்தனை குழந்தைகள்? யார் யார்?

____

____

கோபிக்கு எத்தனைக் குழந்தைகள்? யார்? யார்?

____



@KTBS NOT TO BE REPUBLISHED

கோபியின் குடும்பம் வேறு ஊருக்குச் செல்லக் காரணம் என்ன?

பிங்கி எதற்காக பட்டணத்திற்கு செல்கிறாள்?

ஷீலா ஏன் இக்குடும்பத்துக்கு வருகிறாள்?

சுரேஷின் குடும்பத்திற்கு வந்த புது உறுப்பினர் யார்?

ராமய்யாவின் குடும்பத்தின் பரம்பரைப் படத்தை எழுது. குடும்பத்திலிருந்து வெளியே சென்றவர்களுக்கு வட்டம் வரைக. வந்தவர்களுக்கு சதுரம் வரைக. ராமய்யாவின் குடும்பத்தில் உண்டான மாற்றங்களை அடையாளம் காட்டு.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்த ஆண்டு ராமய்யாவின் குடும்பத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன? ஏன்?



படித்தறிக:

குடும்பத்திலுள்ளவர்கள் சிலர் சில காரணங்களினால் வேறிடம் செல்கிறார்கள், புது உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வந்து சேருகிறார்கள்.

உன் குடும்பத்தின் பரம்பரை வளர்ச்சி மரத்தை எழுது.

உன்னுடைய குடும்பத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்திருந்தால் பரம்பரை மரத்தில் அவர்களுக்கு Δ அடையாளமிடு. அவர்களுடைய விவரங்களை இங்கு எழுது.

பெயர்	தொடர்பு (சம்பந்தம்)	வந்த ஊரின் பெயர்	வந்ததின் காரணம்

@KTBS NOT TO BE REPUBLISHED

உன் குடும்பத்திலிருந்து உறுப்பினர்கள் வேறிடத்துக்கு சென்றிருந்தால் அவர்களுக்கு O அடையாளமிடு. அவர்களுடையை விவரங்களை இங்கு எழுது.

பெயர்	தொடர்பு (சம்பந்தம்)	தற்பொழுதுள்ள ஊரின் பெயர்	வேறிடத்திற்குச் செல்வதற்கான காரணங்கள்

இங்கு இரண்டு குடும்பங்களின் எளிய வம்சமரம் அளிக்கப் பட்டுள்ளது. இதில் O ல் காட்டியுள்ளவர்கள் குடும்பத்திலிருந்து வேறிடம் சென்றுள்ளனர். Δல் இருப்பவர்கள் இக்குடும்பத்திற்கு வந்து சேர்ந்தவர்கள். இவைகளை கவனிக்கவும்.



சலீம் மற்றும் பாத்திமாவுக்கு எத்தனை குழந்தைகள்?

சலீம் குடும்பத்தில் தற்போது எத்தனைப் பேர் உள்ளனர்?

சலீம் குடும்பத்திலிருந்து வேறு குடும்பத்திற்கு சென்றவர்களின் எண்ணிக்கை என்ன?

வேறு குடும்பத்திலிருந்து சலீம் குடும்பத்திற்கு வந்தவர்கள் எண்ணிக்கை என்ன?



©KTBS NOT TO BE REPUBLISHED

ராஜுவின் குடும்பத்தில் எத்தனைப் பேர் உள்ளனர்?

ராஜுவின் குடும்பத்திற்கு வந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

ராஜுவின் குடும்பத்திலிருந்து வெளியில் சென்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

___

சலீம் மற்றும் ராஜுவின் குடும்பத்தில் எந்த குடும்பம் பெரியது? ஏன்?

___

___

பெரியோர்களின் உதவியுடன் நான்கு வருடங்களுக்கு முன் பிருந்தவர்களுடைய உன்னுடைய வம்ச மரத்தை எழுதுக. தற்போதுள்ள உன் குடும்பத்தின் வம்ச மரத்தை எழுதுக.

4 வருடங்களுக்கு முந்தைய வம்ச மரம்	தற்போதுள்ள வம்ச மரம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

நீ எழுதிய இரண்டு வம்சமரங்களை ஒப்பிட்டு விடை எழுது.

அன்று மற்றும் இன்று உன்னுடைய குடும்பங்களில் எது பெரிய குடும்பம்?

___

இந்நான்கு ஆண்டுகளில் உன்னுடைய குடும்பத்தில் ஏதாவது மாற்றமிருந்ததா இல்லையா? மாற்றமிருந்தால் காரணம் எழுது.

____

____

____

____

உன்னுடைய வீட்டிற்கு சுற்று முற்றும் உள்ள குடும்பங்களை கவனி. ஒரு பெரிய குடும்பம் மற்றும் சிறிய குடும்பத்தின் பரம்பரை மரத்தை தயாரிக்க.

பெரிய குடும்பம்	**சிறிய குடும்பம்**

@KTBS
NOT TO BE REPUBLISHED

குடும்பத்தின் உறுப்பினர்கள் வேறிடத்திற்கு சென்று நிலைத்து இருப்பதற்கான காரணங்களை பட்டியலிடு. பெரியோர்களின் உதவியைப் பெற்று எழுது.

____

____

____

____

____

நீ அறிவாயா?

- தார்வாடவிலிருந்து 25 கி.மீ தூரத்திலிருக்கும் லோகூரு என்னும் கிராமத்தில் 7 தலை முறைகளாக உள்ளவர்கள், ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். இன்று இந்தப் பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 180 பேர்.
- எம்.எம். தொழில் குடும்பம் என்றே அடையாளம் காணப்படும் கிருஷ்ண மூர்த்தி அவர்களின் குடும்பத்தில் 40 பேர் உள்ளனர். இவர்கள் பெங்களூரில் வாழ்ந்து வருகிறார்கள்.
- பரஸ்பரம் ஒற்றுமைக் குறைவு, உதவியின்மை, வேலைப் பங்கீடு செய்வதில் சமாதானமின்மை, புதுப்புது தேவைகள் போன்றவைகளால் பெரிய குடும்பங்கள் சிறு குடும்பங்களாக மாறி வருகின்றன.
- மூன்று தலைமுறைகளின் பரம்பரை மரம் அல்லது விவரங்களை பல்வேறு விவரங்களில், சமய முறைகளிலும் பயன் படுத்துகின்றனர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

அலகு - 17

இல்லமே முதல் பள்ளிக்கூடம்

M6G5E2

இவ்வலகைக் கற்றபின் நீ,

- மதம், இனம், பால், குணநலன்கள் கலாச்சாரங்களை அனுசரித்தல், போன்றவைகளால் கூடிய ஒரு சிறிய அலகே ஒரு குடும்பம் என்பதை அறிவர்.
- குடும்பத்தின் நற்குணங்களால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களை கவனிப்பாய்.

பவித்ரா

எங்களுடைய வீட்டில் அப்பா தினமும் அதிகாலையில் கடவுளுக்கு பூஜை செய்வார். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இரவு உணவு உண்போம். எங்கள் அப்பா, எனக்கும் என் அண்ணனுக்கும் ஒரே விதமான புத்தகங்கள், பேனாக்கள் வாங்கித்தருவார். அனைவரையும் மதிக்க வேண்டும், மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கூறுவார். விழாக்காலங்களில் குழந்தைகளுக்கு மிட்டாய் (இனிப்பு) வழங்குவார். நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஊரில் நடைபெறும் திருவிழாக்களில் கலந்து கொள்வோம்.

ரஜியா

எங்களுக்கு வெள்ளிக்கிழமை என்றாலே பண்டிகை. வெள்ளிக்கிழமை நானும் அம்மாவும் வீட்டிலேயே தொழுகை நடத்துவோம். தம்பியும் அப்பாவும் மசூதிக்குச் சென்று தொழுகை நடத்துவார்கள். ரம்ஜான் பண்டிகையின்போது ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்வோம். அனைவரையும் ஒரே விதமாக மதித்துப் போற்றவேண்டும். என்று பாட்டி சொல்வார்கள். அம்மா ஒய்வு நேரத்தில் எனக்கு அரபிக் மொழியை சொல்லித்தருவார்கள்.

ஜான்

எங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை புனிதமான நாள் அன்று அனைவரும் சர்ச்சுக்குச் சென்று இறைவழிபாடு செய்வோம். அப்பா அம்மாவுக்கு ஓய்வு இருப்பதினால் அனைவரும் ஒன்றுகூடி உணவு உண்போம். அம்மாவுக்கு ஓய்வு கிடைத்தால் வீட்டை அலங்காரம் செய்வார்கள். பைபிள் படிப்பார்கள் கதைசொல்வார்கள். அனைவருடனும் நட்புடன் பழகி. சண்டை போடக் கூடாது என்று அப்பா கூறுவார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

படித்தறிக:

வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு வழிமுறைகளை அனுசரிப்பார்கள். அனுசரணைகள் எதுவாக இருந்தாலும் பெரியவர்களுக்கான கௌரவத்தைக் அளிக்க வேண்டும். எளிய மக்களுக்கு நல உதவிகள் செய்ய வேண்டும். அனைவரிடமும் நட்பும், அன்பும் பாராட்ட வேண்டும் என்று நமது கலாச்சாரங்கள் அழுத்தமாக்க கூறுகின்றன.

இது வரையில் நீ கௌரி, ரஜியா மற்றும் ஜான் குடும்பத்தைப் பற்றி அறிந்துள்ளாய். இப்பொழுது உன் குடும்பத்தின் பழக்க வழக்கங்கள் பற்றி இங்கு எழுது.

உன் குடும்பத்தில் தினந்தோரும் கடைப்பிடிக்கும் ஆச்சாரங்கள் யாவை?

வீட்டு வேலைகளில் யார் யாருக்கு உதவுகிறார்கள்?

நீ உன் நண்பர்களுடன், மூத்தோர்களுடன், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று உன் குடும்பத்தினர் கூறியுள்ளனர்?

உன் குடும்பத்தில் கொண்டாடும் பண்டிகைகளைப் பற்றி எழுது.

படித்தறிக:

மதம், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள். கலாச்சாரங்களைக், கடைப்பிடித்து வரும் ஒரு சிறிய அலகே குடும்பம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்த படத்தில் உள்ள உரையாடல்களை கவனி, வினாக்களுக்கு விடையளி.



குடும்பத்தினர் உயர்க்கல்வி அளித்ததினால், சமுதாயத்திற்கு ஆன பயன்கள் யாவை ?

____

____

____



சமுதாயத்திற்கு பயன் அளிக்கும் விதமாக முதியோருக்கான ஆசிரமம் நடத்தும் எண்ணம் எங்கிருந்து வந்தது ?

____

KTBS NOT TO BE REPUBLISHED

அம்மாவின் குணம் அறிந்து அவரைப் பின்பற்றுவதால் சுற்றுச் சூழலுக்கும், சமுதாயத்திற்கும் உண்டாகும் நன்மைகள் யாவை?

____

____

____

படித்து - அறிக

குடும்பத்தின் ஒழுக்க நெறிகள் மாறுபாடு அடைந்ததால் சமுதாயத்தில் பல்வேறு வகையான மாற்றங்கள் உண்டாகின்றன.

எடுத்துக்காட்டு:

- அனைத்து பணிகளிலும் பெண்கள் பங்கேற்றிருப்பது.
- குழந்தைத் திருமண முறை குறைந்திருப்பது.
- கல்வி, குழந்தைகளின் அடிப்படை உரிமையாகி இருப்பது.

@KTBS NOT TO BE REPUBLISHED

மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையைப் பற்றி நூல் நிலையத்தில் உள்ள புத்தங்களைப் படி.

பெரியோர்களிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டறிந்து வினாக்களுக்கு விடையளிக்க.

காந்தியடிகள் தம் குடும்பத்திலிருந்து கற்ற நற் குணங்கள் மற்றும் நீதிகள் யாவை?

____

____

____

____

இவைகள் சமுதாயத்தை திருத்துவதற்கு எவ்வகையில் உதவியாக இருக்கும்?

____

____

____

____

நீ வளர்ந்து பெரியவனாகி/பெரிய வளாகிய பிறகு என்னவாக வேண்டும் என்று விரும்புவாய்? ஏன்?

இதனால் சமுதாயத்திற்கு உண்டாகும் பயன்கள் யாவை? எழுதுக.

கொடுக்கப்பட்டுள்ள கதையைப்படி காரணத்தை யூகித்து எழுது

படித்து - அறிக.

இரண்டு குழந்தைகளின் கதை

ஊரிலிருந்து வந்து கொண்டிருந்த சந்திரண்ணன் வழி தவறினார். நடந்து நடந்து களைப்படைந்தார். அவர் ஓய்வெடுத்துக் கொள்ள ஒரு வீட்டின் பக்கம் வந்தார். வீட்டிலிருந்து சிறுவன் இவரைப் பார்த்து ''பிடியுங்கள், இவனிடம் உள்ள பொருட்களை எல்லாம் பிடுங்கிக் கொள்ளுங்கள்'' என்று பலமாக கத்தினான். சந்திரண்ணா பயந்து நடுங்கி அதே தெருவின் கடைசி வீடுவரை ஓடி நின்றார். அங்கிருந்த மற்றொரு சிறுவன் அவரைப் பார்த்து ''வாருங்கள், உட்காருங்கள், ஓய்வெடுங்கள் தாகத்திற்கு நீர் குடியுங்கள்'' என்று உபசரித்தான். நீர் குடித்து களைப்பைப் போக்கிக் கொண்ட சந்திரண்ணா தான் கண்ட இரண்டு சிறுவர்களின் குணங்களை சிந்தித்தவாறு தன்னுடைய வீட்டுக்குச் செல்லும் வழியில் நடந்தார்.

சந்திரண்ணா பார்த்த முதல் சிறுவன் ''பிடியுங்கள் இவனிடம் உள்ள பொருட்களை எல்லாம் பிடுங்கிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லக் காரணம் யாது?

NOT TO BE REPUBLISHED
©KTBS

சந்திரண்ணா தான் கண்ட இரண்டு சிறுவர்களில் யாரைப் போற்ற வேண்டும்? ஏன்?

சந்திரண்ணா கண்ட இரண்டு சிறுவர்கள் வெவ்வேறு குணங்களைக் கொண்டிருக்கக் காரணம் என்ன?

உனக்குத் தெரியுமா?

- ஜைன மதத்தின் மிக முக்கியத் தத்துவமானஅகிம்சை அவர்களுடைய உணவு முறையைகளிலேயே காணலாம். இவர்கள் தாவர உணவைவயே கட்டாயமாக உண்பார்கள். கிழங்கு வகைகளை பெறுவதற்கு வேரைத் தோண்டவேண்டி இருப்பதால் தாவரங்கள் இறந்து விடுகின்றன என்று இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் கிழங்குவகைகளை பயன் படுத்துவதில்லை.
- சிறுவயதில் தன் குடும்பத்தினர் முக்கியமாக தந்தைக் கற்றுத் தந்த ஒழுக்கம், வீரம், நல்ல மனப்பான்மை முதலிய ஒழுக்கங்கள் நிறைந்த குடகைச் சேர்ந்த திரு கரியப்பா இந்திய நாட்டின் முதலாவது படைத் தலைவராக தேர்ந்தெடுக்க உதவிற்று. இந்தியப் படைப்பிரிவின் உயர்ந்த பதவியை அலங்கரித்த இருவரில் இவரே முதலாமவர்.
- புகழ் பெற்ற எழுத்தாளர் டி.வி. குண்டப்ப அவர்களின் மகன் பி.ஜி. சுவாமியவர்கள் பெயர் பெற்ற தாவரஇயல் அறிஞர், தந்தையிடமிருந்து பெற்ற இலக்கிய அறிவை தாவர இயலுக்கு பயன் படுத்திக் கொண்டார் இவர் எழுதிய '**பசும்பொன்**' என்னும் புத்தகம் இன்று வரையில் தாவர இயல் மாணவ மாணவிகளுக்கு தேவையான விவரங்களை அளித்து வருகிறது. ஆயிரக் கணக்கான மாணவ மாணவிகள் இதனால் பெரிதும் பயன் அடைந்துள்ளனர், பயனடைந்தும் வருகிறார்கள்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

அலகு - 18

ஒவ்வொருவரின் சிறப்பு

D4N4Q2

இவ்வலகைக் கற்றபின் நீ,

- குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களின் குணங்கள் மற்றும் திறமைகளை அடையாளம் காண்பாய்.
- ஒவ்வொருவரும் சிறந்தவர்கள் என்பதை அறிவாய்.
- விசேடமான அவசியமுள்ளவர்கள் இடையில் உள்ள தொடர்பு, ஒழுக்கங்களை. அறிந்து கொள்வது மேலும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய அனுபவம் பெற்று பதில் வினை செய்வாய்.

©KTBS NOT TO BE REPUBLISHED

லதாவின் பள்ளியில் அடுத்தவாரத்தில் ‘பிரதிபாகாரஞ்சி’ நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அன்று பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு பலவகையான போட்டிகள் ஏற்படுத்த வேண்டுமென முடிவு செய்தனர். போட்டியாளர்களின் பெயர் பட்டியலை பள்ளியின் அறிவிப்பு பலகையில் அறிவித்தனர். பள்ளி முடிந்த பிறகு லதா மற்றும் நண்பர்கள் சேர்ந்து எப்போட்டியில் பங்கேற்க வேண்டும் என்று விவாதிக்கத் தொடங்கினர்.

லதா : ராஜு நீ படம் நன்றாக வரைவாய் அல்லவா? ஓவியப் போட்டிக்கு உன் பெயரைக் கொடு.

ராஜு : லதா, உன் குரல் மிகவும் இனிமையாக உள்ளது பாட்டு போட்டியில் ஏன் சேரக்கூடாது?

மகமத் : ரீட்டா, நீ மண்ணால் பொம்மைகளை நன்றாக செய்வயே, களிமண்ணின் மாதரி தயாரிப்புக்கு நீயே சரி.

ரீட்டா : முகமது நாடகம் நன்றாக நடிப்பான். லதா அவனுடைய பெயரை ஏன் கொடுக்கக்கூடாது.

லதா மற்றும் ராஜு எந்த போட்டிகளில் சேரவேண்டும் என யோசித்தனர்?

____

____

முகமது எந்த போட்டியில் சேர்ந்தால் நல்லது என்று ரீட்டா கூறினாள்?

____

____

ரீட்டா ஏன் மண்ணின் மாதரி போட்டிக்கு சேர வேண்டும் என்று முகமது கூறினான்?

____

____

உன் பள்ளியில் 'பிரதிபா காரஞ்சி' நடைபெற்றால் நீ எந்த போட்டியில் பங்கேற்பாய்? ஏன்?

____

____

____

உன்னிடம் என்னென்ன சிறப்பு திறமைகள் உள்ளன? எழுது

______________ ______________

______________ ______________

______________ ______________

@KTBS
NOT TO BE REPUBLISHED

உன் நண்பர்களிடமுள்ள சிறப்பு திறன்களை பட்டியலிடு.

எடுத்துக்காட்டு:

நண்பர்களின் பெயர்	**சிறப்பு குணம்.**
ராமு	நன்றாக நடிப்பான்

உன் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் பெயரை எழுது. அவர்களிடம் நீ போற்றும் சிறப்பான திறமைகளை எழுது.

உறுப்பினர் பெயர்	**போற்றக்கூடிய சிறந்த திறமை.**

@KTBS
NOT TO BE REPUBLISHED

சிறுவயதிலேயே திறமைகளை அடையாளம் காணவேண்டும். அதற்கு சரியான வாய்ப்பு மற்றும் உற்சாகத்தை அளித்ததால் அந்தந்த இடங்களில் பெயர் பெற்ற பல மகான்கள் மற்றும் பெண்கள் நம் மாநிலமான கருநாடகத்தில் உள்ளனர். இங்கு நான்கு பேரின் அறிமுகம் கொடுக்கப் பட்டுள்ளது.

படித்து அறிக:



டாக்டர் : ராஜ்குமார்

தன்னுடைய அபாரமான நடிப்பாற்றல் மற்றும் பாட்டுத் திறமையால் டாக்டர் ராஜ்குமார் அவர்கள் கன்னட பட உலகில் புகழ் பெற்றிருந்தார். 200க்கும் அதிகமான படங்களில் நடித்த இம்மாபெரும் நடிகர் புகழ் பெற்ற தாதா சஹேப் பால்கே விருதினைப் பெற்ற முதல் கன்னடர். கலை உலகில் புகழ்பெற்ற டாக்டர் ராஜ்குமார் அவர்களுக்கு அபிநய தந்தை யென்று புகழ் வந்தது. இவர் தம்முடைய 8 வது வயதிலேயே நாடகத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார்.

குப்பள்ளி வெங்கடப்பா புட்டப்பா (குவெம்பு)



குப்பள்ளியில் பிறந்த இவர் தேசியகவி என்றே புகழ, பள்ளிகளில் தினமும் பாடப் படும் '**ஜெய பாரத ஜனனிய தனுஜாதே**' நாட்டுவாழ்த்தை எழுதியவர் குவெம்பு தம்முடைய எழுத்தாற்றல் மூலம் 'ஞான பீட' விருதைப் பெற்ற முதல் கன்னட கவி என்னும் பெயர் இவருக்குண்டு. குழந்தைகளுக்காக 'கிந்தர ஜோகி' நன்ன கோபால, அமலன கதெ போன்ற நூல்களை எழுதியுள்ளார். சாகித்தியத் துறையில் பெயர் பெற்ற குவெம்பு அவர்களுக்கு சிறுவயது முதலே நல்ல சூழ்நிலைகள் இருந்தன. இவருக்கு சிறுவயது முதலே கதை, கவிதை, புத்தங்கள் படிப்பது, எழுதுவது போன்ற பழக்கங்கள் இருந்தன.

கித்தூர் ராணி சென்னம்மா

பெளகாவி மாவட்டத்திலுள்ள காகதிய என்னும் இடத்தில் பிறந்த சென்னம்மா சிறுவயது முதல் மிகவும் தைரியசாலி. ஏழு வயதாகும் போதே குதிரையேற்றம், கத்தி சுழற்றுதல், வில்வித்தை போன்றவைகளில் இவருக்கு ஆர்வமிருந்தது. சிறுவயதிலேயே போர்த்திறம் கொண்ட இவர் கித்தூரின் அரசனான மல்லசர்ஜனனை மணந்தார். கித்தூருக்கு அரசியானாள். மல்லசர்ஜன் இறந்த பிறகு ஆங்கிலேயருடன் வீரத்துடன் போராடி வீரமங்கை என்ற பெயர் பெற்றார்.

©KTBS NOT TO BE RE-PUBLISHED

கங்கு பாய் ஹானகல்



தார்வாடில் பிறந்த கங்குபாய் அவர்கள் தம்முடைய பாடும் திறமையால் சங்கீத கலையில் உச்சத்தில் இருந்தார். இந்தியாவில் அனைவராலும் பேசப்பட்டார். இவருக்கு 13 வயதாகும்போது இவருடைய தந்தையும், தாயும் இவருடைய பாடும் திறமையைக் கண்டு, சங்கீதப் பள்ளிக்கு அனுப்பினர். கர்நாடக சங்கீதம் மற்றும் இந்துஸ்தானி சங்கீதம் கற்ற இவர் இந்திய நாட்டின் பல்வேறு இடங்களில், சங்கீத கச்சேரிகள் நடத்தினார். அனேக விருதுகளைப் பெற்றார். ஆகாஷவாணியில் பல்வேறு சங்கீத நிகழ்ச்சிகளை அளித்துள்ளார். இந்துஸ்தானி பாடல்களில் இவருக்கு முக்கிய இடம் உள்ளது.

தம்முடைய சிறந்த குணம் மற்றும் திறமையின் மூலம் கன்னட நாட்டில் பலர் புகழ் பெற்றுள்ளார்கள். இப்படிப்பட்ட புகழ்பெற்றவர்களைப் பற்றி பள்ளியில் அல்லது நூல் நிலையங்களில் கிடைக்கும் புத்தங்களைப் படி.

உன்னுடைய ஊரில் தங்களுடைய புகழ் வாய்த குணங்கள் அல்லது திறமைகளால் பெயர் பெற்ற மாமனிதர்களின் பெயர்களைப் பட்டியலிடு. அவர்களின் சிறந்த குணம் அல்லது திறமைகளை பெரியவர்களின் உதவியுடன் அறிந்து எழுது.

புகழ் பெற்ற நபர்கள்	**தனிச்சிறப்பான குணம்/திறமை**

@KTBS NOT TO BE REPUBLISHED

கருநாடகத்தில் புகழ்வாய்ந்த கவிஞர்கள், கலைஞர்கள், பாடகர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகள் பற்றி பெரியோர்கள் அல்லது ஆசிரியர்கள் மூலம் அறிந்து கொள். இவர்களைப் பற்றிய புத்தங்களை பள்ளிநூல் நிலையத்திலிருந்து வாங்கி படி. உனக்கு மிகவும் பிடித்த ஒரு புகழ் பெற்ற நபரைப் பற்றி நான்கு வரிகள் எழுது. இவருக்கு இளமையில் உற்சாக மூட்டியவர்கள், உதவியவர்களை அறிந்து கொள்.

____

____

____

____

சிலருக்கு உடல் குறைபாடுகளிருந்தும் தங்களுடைய சிறப்பான குணங்கள் மற்றும் திறமையால் உறுதியுடன் முன்னேறி உலகிலேயே நற்பெயர் பெற்றுள்ளார்கள்.

அவர்களில் ஒருவரைப் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது.

படித்து - அறிக

தாமஸ் ஆல்வா எடிசன்



சிறுவன் எடிசன் பள்ளியில் கணக்குப்பாடத்தில் மிகவும் பின்தங்கி இருந்தான். சொற்களை உச்சரிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டான். இச்சிறுவன் பள்ளியில் சேர்ந்த மூன்று மாதங்களில் காய்ச்சல் ஏற்பட்டு காதுகள் கேட்கும் திறனை இழந்தன. இதனால் பள்ளிக்குச் செல்வது நிருத்தப்பட்டது. தாய் சிறுவனுக்கு வீட்டிலேயே கல்வி கற்பித்தாள். இச்சிறுவன் வளர்ந்து பெரியவனாகி பல்வேறு சாதனங்களைக் கண்டு பிடித்தான். நம்முடைய வீட்டில் எரியும் பல்பு போன்ற மிகச் சிறந்த சாதனங்களைக் கண்டு பிடித்த மகாமேதையே தாமஸ் ஆல்வா எடிசன்.

எடிசன் வாழ்க்கையிலிருந்து நீ என்ன அறிந்தாய் என்பதை விவரி.

____

____

____

©KTBS NOT TO BE REPUBLISHED

கடந்த வகுப்பில் நீ கேட்கும் திறன் மற்றும் பேசும் திறன் அற்றவர்கள் சைகைகளின் மூலம் எவ்வாறு பேசுகிறார்கள் என்பதை அறிந்திருப்பாய். இதுவல்லாமல் பேசுவதற்கு சைகை எழுத்துக்களை பயன்படுத்துகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?

இதனை கவனிக்க.



கை விரல்களைப் பயன்படுத்தி இந்த எழுத்துக்களை எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள் என்பதை பார்.

இதனுடன் கை மற்றும் விரல்களின் இயக்கங்களினால் சில சைகைகள் செய்து தெரிவிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக இங்கு சில சைகைகளின் அடையாளங்கள் மற்றும் அவைகளின் பொருள் கொக்கப் பட்டுள்ளது. அதனை அறிந்துகொள்க.

	கோபம்
	வேறொன்று
	நான் ஒருவனே
	எழுந்திரு
	வியப்பு

@KTBS
NOT TO BE REPUBLISHED

படித்தறிக:

பார்க்கும் திறனற்றோர் பிரெயில் வடிவங்களையும் பேசும் மற்றும் கேட்கும் திறனற்றோர் சைகைகளைப் பயன் படுத்தி உரையாடல் நடத்துவார்கள். இவர்கள் கூட நம்மவர்கள்தான். நம்மைப் போன்றவர்களே. ஆனால் இவர்களுக்கு சில சிறப்புக்கல்வி அவசியமாகிறது என்பதை நீ அறிந்திருக்க வேண்டும். இவர்களையும் நம்மைப்போன்றே பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் ஊரில் உடல் ஊனமுற்று இருந்து சாதனை செய்திருந்தால் அவர்களைப் பற்றி பெரியவர்கள் மூலம் கேட்டு அறிந்து கொள்.

உனக்குத் தெரியுமா?

சிறுவயதிலிருந்தே பழக்கப் படுத்திக் கொண்ட திறமைகள் மற்றும் சிறப்பைப் பெற்ற சர்.எம். விஸ்வேஸ்வரய்யா இந்தியாவின் மிக உன்னதமான பொறியியல் திறமைகளால் அணைக்கட்டுகள், தொழிற் சாலைகள், சாலைகள் போன்றவை களை அமைத்து, ஆயிரக்கணக்கான மக்களுக்கு சேவை செய்தார். அதனால் நமது இந்திய அரசு 1955ல் உயர்ந்த விருதான **பாரத ரத்னா** வை அளித்து பெருமைப் படுத்தியது.

அன்னை தெரேசா அவர்கள் தம்முடைய வாழ்க்கை முழுவதையும், நோயாளிகளுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் அனாதைகளுக்கும் சேவை செய்ய அர்பணத்தார். இதற்காக இவருக்கு '**நோபல்**' பரிசு அளித்து கௌரவிக்கப் பட்டார்.



கன்னட கலைஉலக நடிகர் பாலகிருஷ்ணா அவர்கள் கேட்கும் திறனற்றவராக இருந்தும். சிறந்த நடிகராகத் திகழ்ந்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 19

தொழில் சிறப்பு

J1E8S4

இவ்வலகைக் கற்றபின் நீ,

- உள்ளூர் மற்றும் வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள வெவ்வேறு தொழிலாளிகளை அடையாளங்காண்பாய்.
- உழைக்கும் மக்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகளை அடையாளம் காண்பதாய்.

இது சோமுவின் வீடு. அவன் வீட்டில் நாள்தோறும் பயன் படுத்தும் பல்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றை எவற்றினால் தயார் செய்கிறார்கள்? இவைகளை யார் தயாரிக்கிறார்கள்? பெரியோர்களிடம் கேட்டு அறிந்துகொள்.



ராமனஹள்ளி ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தின் மக்கள் செய்யும் வெவ்வேறு தொழில்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இவர்கள் என்னவேலை அல்லது தொழில் செய்கிறார்கள் என்பதை விடுப்பட்ட இடங்களில் எழுது.

© KTBS NOT TO BE REPUBLISHED

தொழில்கள்

1. ____________________ 6. ____________________

2. ____________________ 7. ____________________

3. ____________________ 8. ____________________

4. ____________________ 9. ____________________

5. ____________________ 10. ____________________

@KTBS
NOT TO BE REPUBLISHED

வெவ்வேறு தொழில்களை செய்யும் மனிதர் படங்கள் இங்கு கொடுக்கப் பட்டுள்ளன. இவர்கள் யார்? இவர்கள் என்னத் தொழில் செய்கிறார்கள் என்பதை எழுதுக.





இவர்கள் உன் ஊரிலுள்ளார்களா? உன் ஊரில் இருப்பவர்களுக்கு (✓) அடையாளமிடு. இது தவிர உன் ஊரில் தொழில்கள் தொடங்கி இருப்பவர்களை அடையாளமிட்டு எழுது.

©KTBS
NOT TO BE REPUBLISHED

கீழே சில தொழில்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களைப் போல நடித்துக்காட்டி அவர்கள் செய்யும் வேலைகளைக் காட்டு.

1. விவசாயி
2. கருமான்
3. ஆசிரியர்
4. மருத்துவர்
5. தபால்காரர்
6. நாட்டியக்காரர்
7. குமாஸ்தா
8. பாடகர்
9. பூ விற்பவர்
10. ஓட்டுநர்

இப்படக்கதையைப் படி.





© KTBS NOT TO BE REPUBLISHED

இந்த வினாக்களுக்கு விடை அளி.

யானை எந்த எந்த தொழில் செய்பவர்களிடம் சென்றது?

____

____

யானை எந்தெந்த பொருட்களை பெற்றது?

____

____

குயவனுக்கு யானை எவ்வாறு உதவியது?

____

____

படித்தறிக:

ஒரு தொழில் செய்பவர் மற்றொரு தொழில் செய்பவர்களை சார்ந்திருப்பார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்த படங்களை கவனி. நீ அணியும் ஆடை இந்த மாதரியில் தயாராகிறது என்பதை அறிந்துகொள்.





யாருடைய உதவியால் நீ அணியும் ஆடை தயாராகிறது என்பதை இப்படம் பார்த்து கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

படித்தறிக:

தயாரான பொருட்கள் நமக்கு கடைகளில் கிடைத்தாலும் அவைகளின் தயாரிப்புக்குப் பின் அநேக தொழிலாளர்கள் உழைத்துள்ளனர்.

பெரியவர்கள் அல்லாமல் சில குழந்தைகள் கூட பல்வேறு தொழில்கள் செய்கிறார்கள் என்பது உனக்குத் தெரியும்.

கடந்த வகுப்பில் உழைக்கத் தொடங்கியுள்ள குழந்தைகள் எதிர்க் கொள்ளும் பிரச்சனையைப் பற்றி அறிந்திருப்பீர்கள்.

நீ பார்த்த ஒரு குழந்தை தொழிலாளியைப் பற்றி எழுது. அவன் அல்லது அவள் எதிர்க் கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றி நான்கு வரிகள் எழுது.

____

____

____

____

அறிந்துக் கொள்க:

- தினசரி வாழ்க்கையில் தேவைப்படும் பொருட்கள் தயாரிப்பிலிருந்து வீட்டு அலங்கார பொருட்கள் தயாரிப்பு வரை அநேக தொழிலாளர்கள் உழைத்து உள்ளனர். இவைகளில் நுண்கலை ஒரு தொழிலாகும்.
- கருநாடகத்தில் நுண் கலைகளில் முதலிடம் பெறுவது சந்தன மரத்தில் செதுக்குவேலை (சிற்பம்) செய்வது.
- மரபொம்மைகள் தயாரிப்பில் சென்னப்பட்டினம் பெயர் பெற்றுள்ளது.
- 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைகளில் ஈடுபடுத்துவது தண்டனைக்குரிய செயலாகும். இந்த வயது குழந்தைகள் கல்வியைக் கட்டாயமாக பெறச் செய்வது நம் எல்லோருடைய பொறுப்பாகும்.
- உழைக்கத் தொடங்கியுள்ள 6-14 வயதுள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் அபிவிருத்திக்காக கருநாடக அரசு சிறப்பு உறைவிடப் பள்ளிகள், மேலும் மறுவாழ்வு மையங்களை அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கியுள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

K5R4X5

அலகு - 20

விழாக்கள் - கொண்டாட்டம்

இவ்வலகைக் கற்றபின் நீ,

- பள்ளி விழாக்களில் மற்றும் தேசிய விழாக்களில் பங்கேற்பாய்.
- தேசிய விழாக்களின் முக்கியத்துவத்தை அறிவாய்.
- தேசிய அடையாளச் சின்னங்களைப் பற்றி அறிவாய் மற்றும் மரியாதை அளிப்பாய்.

அம்மாவுடன் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த குட்டி வெண்பறவை, பள்ளி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த விழாவைப் பார்த்தது.

@KTBS NOT TO BE REPUBLISHED

தேசிய விழா
என்றால் என்ன?

நாட்டை தேசியம் என்றும்
அழைக்கிறார்கள், தேசியத்திற்கு
தொடர்புடைய முக்கிய நாட்களை
நாட்டிலுள்ள மக்கள் அனைவரும்
எல்லா இடங்களிலும் பண்டிகையைப்
போன்று கொண்டாடுவதே தேசிய விழா.

படித்து-அறிக

பொதுவாக **''தேசம்''** மற்றும் **'நாடு'** எனும் சொற்களை ஒரே பொருள் உள்ளதாகப் பயன் படுத்துகிறோம். ஆனால் குறிப்பிட்ட பூகோள எல்லை உள்ள, ஒரு ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமே தேசம்.

ஒரே வரலாறு, கலாச்சாரம் மேலும் தாங்கள் ஒன்றே என்னும் பாவனையுடன் வாழும் மக்களை உட்கொண்ட தேசமே நாடாகும்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

சுதந்திர தின விழா
மட்டுமே தேசிய
விழாவா?

குழந்தாய், அது ஒன்றே அல்ல இந்திய
நாடு குடியரசானதின் நினைவாக ....அன்று
குடியரசு நாள் விழாவைக் கொண்டாடுகிறோம்.

அவ்வாறே காந்திஜி பிறந்த நாளான ....ஐ
காந்தி ஜெயந்தி என்று
கொண்டாடுகிறோம்.

மேலே கோடிட்ட இடங்களில் சரியான தேதியை நிரப்பு.

இதுவல்லாமல் கருநாடகமாநிலத்தில் நவம்பர் 1 அன்று கன்னட ராஜோத்ஸ்வாவை கொண்டாடுகிறோம். அன்று நமது மாநிலம் அமைக்கப்பட்ட நாளாகும். இத்தினத்தை கருநாடக மாநிலத்தின் மக்கள் ஆடம்பரமாகக் கொண்டாடுவார்கள்.

படித்து-அறிக

பரம்பரையாக வந்த கலாச்சார வரலாற்றை உண்டாக்கும் விழாக்களை நாட்டு விழாக்கள் என்று கொண்டாடுகிறோம். கருநாடகத்தில் தசராவை நாட்டு விழாவாகக் கொண்டாடுகிறோம்.

அம்மா கீழே பார், குழந்தைகள் எல்லோரும் ஏன் அப்படி நிற்கிறார்கள்,

இப்பொழுது அங்கு தேசியக் கொடியை பறக்க விட்டு, தேசிய கீதத்தை பாடிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்கள் அனைவரும் நேராக அசையாமல் நிற்கிறார்கள். நின்று கௌரவத்தைக் காட்டுகிறார்கள்.

அம்மா பறக்கும் கொடியைப் பார்.

அது நமது தேசியக் கொடி

© KTBS
NOT TO BE REPUBLISHED

இவ்வினாக்களுக்கு விடையளி.

1. இது என்ன? இதில் எத்தனை நிறங்கள் உள்ளன. நடுவில் என்ன உள்ளது?

____

____

____

2. தேசியக் கொடியை உன் பள்ளியில் எந்தெந்த விழாக்களில் பறக்க ஏற்றுகிறார்கள்?

____

____

____

3. நீ பள்ளியின் இறை வணக்கத்தில் தினந்தோறும் பாடும் பாடல்கள் யாவை?

____

____

4. நமது நாட்டுப் பாடல் எது? தேசிய கீதம் எது?

நாட்டுப்பாடல்: ______________________________

தேசிய கீதம் : ______________________________

5. தேசிய கீதம், நாட்டுப்பாடல் பாடும்போது நீ எவ்வாறு நிற்பாய்? ஏன்?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED



தேசியச் சின்னங்களை நீ எங்கெங்கு பார்த்துள்ளாய்? இங்கு எழுது.

____________________ ____________________

____________________ ____________________

____________________ ____________________



படித்தறிக:

- **தேசிய சின்னம், தேசியக் கொடி** மற்றும் **தேசியகீதங்கள்** நமது நாட்டின் முக்கிய தேசிய சின்னங்களாகும்.
- நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையின் குணங்களை பயன் படுத்திக் கொள்வதற்கு இவைகள் உதவுகின்றன.

உனது பள்ளியில் கொண்டாடும் தேசிய விழாக்களை தேதிகளுடன் பட்டியலிடுக. அவைகளில் ஒன்றைப் பற்றி நான்கு வரிகளை எழுதுக.

____

____

____

____

____

____

படத்தில் ஒரு பள்ளி உள்ளது. இங்கு குழந்தைகள் தின விழாவைக் கொண்டாடும் படம் உள்ளது. கவனிக்க.

NOT TO BE REPUBLISHED @KTBS

இந்த படத்தில் குழந்தைகளின் உரையாடல்களைப் பட்டியலிடு.

____

____

____

____

உன் பள்ளியில் குழந்தைகள் தினவிழாவை எவ்வாறு கொண்டாடுகிறீர்கள் என்பதை நான்கு வரிகளில் எழுதுக. அந்நாளில் நீ என்னென்ன செய்வாய் என்பதையும் எழுதுக.

____

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

உனக்கு இது தெரியுமா?

• கருநாடக கொடியின் நிறம் - மஞ்சள் மற்றும் சிவப்பு	
• கருநாடகத்தின் விலங்கு - யானை	
• கருநாடகத்தின் பூ - தாமரை	
கருநாடகத்தின் மரம் - சந்தன மரம்	

• கருநாடகத்தின் பறவை - நீலகண்ட்டா	
• இந்திய தேசிய விலங்கு - புலி	
• தேசிய பூ - தாமரை	
• தேசிய பறவை - மயில்	
• தேசிய மரம் - ஆலமரம்	
• தேசிய கனி - மாம்பழம்	

@KTBS
NOT TO BE REPUBLISHED

அலகு - 21

கோ ......

W7K5L1

இவ்வலகைக் கற்றபின் நீ,

- ஆட்டங்கள் மற்றும் விதிகளை அறிமுகப் படுத்திக் கொள்வாய்.
- ஆட்டங்களினால் சமுதாயத் தொடர்புகள் முன்னேற்றம் அடைவதை அடையாளம் காண்பாய்.
- கோயில் விழாக்கள் மற்றும் சர்க்கஸின் மூலம் கிடைக்கும் பொழுது போக்கைப் பற்றி விவரிப்பாய்.

நீ கடந்த வகுப்பில் உள்ளரங்க மற்றும் வெளியரங்க ஆட்டங்களைப் பற்றி அறிந்திருப்பாய். பள்ளியில் ஆசிரியர் பல ஆட்டங்களை ஆடவைத்திருப்பார். உனக்கு எந்தெந்த ஆட்டங்களில் அறிமுகம் உள்ளது என்பதை கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளித்து அறிந்து கொள்.

1. புளியங்கொட்டைகளைப் பயன்படுத்தி ஆடும் ஒரு ஆட்டம்.

   ____

2. நொண்டிக் கொண்டே ஆடும் ஆட்டம்.

   ____

3. பேட் மற்றும் பால் பயன்படுத்தி ஆடும் ஆட்டம்.

   ____

4. தாயக் கட்டைகளுடன் ஆடும் ஆட்டம்.

   ____

5. கவடிகளைப் பயன் படுத்தி ஆடும் ஆட்டம்.

   ____

6. நீரில் ஆடும் ஒரு ஆட்டம்.

   ____

7. அணிகளாக ஆடும் ஒரு ஆட்டம்.

   ____

NOT TO BE REPUBLISHED @KTBS

8. கைகளினால் ஆடும் பந்தாட்டம்.

____

9. உன் மாவட்டத்தில் ஆடப்படும் புகழ் பெற்ற ஆட்டம்.

____

10. கோயில் விழாக்களில் நீ பார்த்த ஒரு ஆட்டம்.

____

இங்கு சில விளையாட்டுகளின் பெயர்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களின் படங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவைகளை பொருத்துக.

ஹாக்கி	
கிரிக்கெட்	
பேட்மின்டன்	
வில்வித்தை	
கேரம்	
செஸ்	

@KTBS NOT TO BE REPUBLISHED

இவர்களை உனக்குத் தெரியுமா? இவர்கள் எந்த ஆட்டத்தில் சிறந்தவர்கள்? விடுப்பட்ட பாகத்தில் எழுதுக.

ராகுல் டிராவிட்	__________	சச்சின் டெண்டுல்கர்	__________
பிரகாஸ் படுகோனே	__________	பி.டி.உஷா	__________
மாலதி ஹொள்ள	__________	அபினவ பிந்தரா	__________
 தனராஜ் பிள்ளை	__________	விஸ்வநாத் ஆனந்து	__________
சானியா மிர்ஜா	__________	மமதா பூஜாரி	__________

@KTBS
NOT TO BE REPUBLISHED

நீ உன்னுடைய நண்பர்களுடன் விளையாடும் 4 வெளியரங்கு ஆட்டங்களை எழுதுக.

______________________ ______________________

______________________ ______________________

4 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அன்று ஒரே கொண்டாட்டம். அவர்களுடைய ஆசிரியை அன்று கோ கோ ஆட்டம் ஆடும் விதத்தை சொல்லித்தரும் நாள். ஆவலோடு காத்திருந்த மாணவர்களை ஆசிரியை ஆட்ட மைதானத்திற்கு அழைத்துச் சென்று ஆடுகளத்தைக் காட்டினார்.



மாணவர்கள் அனைவரும் ஆடுகளத்தை சுற்றிவந்த பிறகு ஆசிரியை வினாக்களைக் கேட்டார். படத்தில் காட்டியுள்ள கோ கோ ஆடுகளத்தை பார்த்து ஆசிரியை கேட்கும் வினாக்களுக்கு நீ விடை எழுது.

1. கோ கோ ஆடுகளம் எந்த வடிவத்தில் உள்ளது?

____

2. கோ கோ ஆடுகளத்தில் எத்தனைக் கம்பங்கள் உள்ளன?

____

3. இரண்டு கம்பங்களுக்கு இடையில் எத்தனை கட்டங்கள் உள்ளன?

____

4. கம்பத்திலிருந்து மற்றொரு கம்பத்திற்கு எத்தனைக் கோடுகள் வரையப்பட்டுள்ளன?

____

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியை, 12 மாணவர்களை ஆட்டக்காரர்களாக தேர்ந்து ஒரு அணியாக்கினார். 12 மாணவர்களை இன்னொரு அணியாகவும் தேர்ந்தெடுத்தார். ஒரு அணி ஓடும் அணி மற்றொரு அணி தொடும் அணி என்று கூறினார்.

பிறகு ஆசிரியை ஆட்ட விதிகளையும் மற்றும் ஆடும் முறைகளையும் விவரித்தார்.

படித்து - அறிக

விதிகள்

- ஆட்டத்தில் இரண்டு இன்னிங்கஸ் இருக்கும். ஒவ்வொரு இன்னிங்கஸிலும் ஓடும் மற்றும் தொடும் (அவுட் செய்பவர்கள்) சுற்றுக்கள் உள்ளன. ஒரு சுற்றின் கால அளவு 7 நிமிடங்கள்.
- கோ கோ அணியில் மொத்தம் 12 பேர் ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். அவர்களில் ஒன்பதுபேர் ஆட்டக்காரர்கள் மற்றும் மூன்று பேர் பதில் ஆட்டக்காரர்கள் இருப்பார்கள்.

@KTRS NOT TO BE REPUBLISHED

ஆசிரியை மாணவர்களை ஆட்டம் ஆடச் செய்தார் இப்படங்களைப் பார்த்து ஆடும் முறையை எழுதுக.



உட்கார்ந்திருக்கும் ஆட்டக்காரர்கள் எத்தனைப் பேர்?

____

கம்பத்தின் பக்கத்தில் எத்தனை ஆட்டக்காரர்கள் நின்று கொண்டுள்ளனர்?

____

ஆட்டக்காரர்கள் எவ்வாறு உட்கார்ந்துள்ளனர்?

____

ஆடுகளத்திற்குள் எத்தனை ஆட்டக்காரர்கள் இறங்கியுள்ளார்கள்?

விளையாட்டு மைதானத்தின் பக்கத்தில் எத்தனைக் குழுக்கள் தயாராக உட்கார்ந்துள்ளனர்? ஒவ்வொரு குழுவிலும் எத்தனை ஆட்டக்காரர்கள் உள்ளனர்?



இப்படத்தில் என்ன நடை பெறுகிறது.



தொடும் ஆட்டக்காரன் என்ன செய்து கொண்டுள்ளான்? என்ன சொல்லிக் கொண்டுள்ளான்?

@KTBS NOT TO BE REPUBLISHED



ஆசிரியை அவுட் என்று ஏன் கூறினார்?

ஆட்டம் ஆடிய பிறகு ஆசிரியை மாணவர்களுக்கு விதிகளை படங்கள் மூலமாக விதிகளின் படி இன்னொரு முறை சரியாக சொல்லிக் கொடுத்தார்



©KTBS NOT TO BE REPUBLISHED

இவ்விதிகளை மீறினால் பவுல் (தவறு) என்பது மாணவர்களுக்கு தெரிந்தது.

மற்றொரு அணியின் ஆட்டக்காரர்கள் தாங்கள் எவ்வாறு ஆட்டம் ஆடினார்கள் என்பதை விவாதித்தனர். ஓட்டக்காரர்கள் தாங்கள் அவுட் ஆகாமல் எவ்வாறு இயங்கி தப்பித்துக் கொண்டார்கள் என்பதைத் தெரிவித்தனர்.



ஆடி முடித்த பிறகு மாணவர்கள் மற்றும் ஆசிரியை வகுப்புக்குச் சென்றனர்.

ஆடி-மகிழ்

நீ உன்னுடைய நண்பர்களுடன், ஆசிரியர்களின் உதவியுடன் கோ கோ ஆடுகளத்தைத் தயார் செய். கோ கோ ஆட்டம் ஆடு.

கோ கோ ஆட்டத்தின் நான்கு விதிகளை எழுது.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

@KTBS NOT TO BE REPUBLISHED

இதுவரையில் நீ கோ கோ ஆட்டத்தின் விதிகளை அறிந்தாய். இதேப்போல வெவ்வேறு ஆட்டங்களின் விதிகளை அறிமுகப் படுத்திக் கொள். உனக்கு விருப்பமான அல்லது நீ ஆடும் எதாவது ஒரு ஆட்டத்தின் விதிகளை எழுது.

குழு ஆட்டங்களினால் உனக்கேற்படும் நன்மைகள் யாவை? நண்பர்களுடன் விவாதித்து எழுது?

@KTBS
NOT TO BE REPUBLISHED

படித்து-அறிக

குழு ஆட்டங்களை ஆடும்போது, உதவி, ஒற்றுமை, குழு ஒற்றுமை, விதிகளைக் கடைப்பிடித்தல், நட்பு, குறியை அடையும் குறிக்கோள் போன்ற அம்சங்கள் இருப்பதினால் சமுதாயத்தின் தொடர்புகள் நன்கு அமையும்.

ஆட்டங்களினால் நமக்கு பொழுது போக்கு, இன்பம் கிடைக்கிறது. இதைப் போன்று திருவிழாக்கள், சங்கங்கள் மூலமாக நமக்கு இன்பம் கிடைக்கிறது.

கோயில் திருவிழாக்கள் பற்றி நீ தற்போது அறிந்து இருக்கிறாய். இங்கு சர்க்கஸின் ஒரு படம் உள்ளது. கவனி.



சர்க்கஸில் என்னென்ன சிறப்பு அம்சங்கள் உள்ளன என்பதை பட்டியலிடு.

____

____

____

____

நீ பார்த்த அல்லது கேட்டிருக்கும் சர்க்கஸ் பற்றி நான்கு வரிகள் எழுது.

____

____

____

____

© NCBS NOT TO BE REPUBLISHED

உனது மாவட்டத்தில் நடைபெறும் புகழ் பெற்ற திருவிழாவைப் பற்றி பெரியோர்களின் உதவிப்பெற்று நான்கு வரிகள் எழுது.

____

____

____

____

படித்து - அறிக

முன்பு மக்களால் பெருமளவு ஆதரவு பெற்றிருந்த சர்க்கஸ்கள் இன்று குறைந்து வருகின்றன. இதற்கான காரணங்களாவன.

- சர்க்கஸில் விலங்குகளை பயன்படுத்தி பொழுது போக்கு அளிப்பது மற்றும் விலங்குகளுக்கு இம்சை அளித்து பயிற்சி அளிப்பதற்கு விலங்கு காப்பு சங்கங்கள் (புளூ கிராஸ்) எதிர்த்தன.
- மக்களுக்கு தொலைக்காட்சி (டி.வி) கணினி (கம்ப்யூட்டர்) போன்றவை களால் பொழுது போக்குகள் கிடைத்து வருகிறது. சர்க்கஸ் பற்றிய விருப்பம் குறைந்து வருகிறது.
- சிறந்த பயிற்சி பெற்ற கலைஞர்கள் குறைந்து வருகிறார்கள் மற்றும் அவர்களுடைய ஆர்வம் குறைந்து வருகிறது.
- சர்க்கஸ் கலைஞர்களுக்குத் தேவையான வசதிகள் செய்வது மற்றும் நிர்வாகம் செய்வதற்கு மிகவும் செலவாகிறது.

அறிந்துக் கொள்க:

- பிரகாஷ் படுகோனே தேசிய அளவில் சிறுவயதிலேயே சாம்பியன் ஷிப்பை வென்ற பேட் மின்டன் ஆட்டக்காரர்.
- கோ கோ ஆட்டத்தில் ‘ராணி லட்சுமி’ பரிசை வென்ற முதலாவது பெண் கருநாடகத்தின் உஷா அனந்த ராமன் ஆவார்.
- இளைஞர் சேவை மற்றும் விளையாட்டுத்துறையின் மூலமாக மாநிலம் முழுவதும் அநேக விளையாட்டுத்துறைப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு நிலையங்கள் இயங்கி வருகின்றன.
- 1981ல் பெங்களூரில் நடை பெற்ற சர்க்கஸ் கூடாரம் தீபற்றி 92 பேர் மரணமடைந்தனர், சுமார் 300 பேர் காயம் அடைந்தனர்.
- முன்பு சர்க்கஸ்களில் விலங்குகளின் காட்சி மற்றும் சாகசங்கள் மிகப் பெரிய ஈர்ப்பாக இருந்தது. ஆனால் விலங்குகளுக்கு பயிற்சி அளிக்க இம்சை வழிகளை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதால் தற்போது சர்க்கஸில் விலங்குகளின் பயன்பாடு தவிர்க்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

2012 ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்தியாவுக்குப் பதக்கங்களைப் பெற்று தந்த விளையாட்டு வீரர்கள்.

ககன் நாரங்	விஜய குமார்
சுசில் குமார்	யோகேஸ்வர் தத்
மேரி கோம்	கிரீஸ்
சேனா நெஹால்	

- இவர்கள் பங்கேற்ற விளையாட்டைப் பற்றியும் பெற்ற பதக்கத்தைப் பற்றியும் படத்தின் கீழ் அளித்துள்ள கட்டத்தில் எழுதுக.
- 2016 ஒலிம்பிக் விளையாட்டுகளில் வெற்றி பெற்ற வீரர்கள், அவர்கள் பெற்ற பதக்கங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கவும். (ஆசிரியர் உதவியைப் பெறவும்)

@KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 22

வசதிகள் - மேம்பாடு (முன்னேற்றம்)

F7G7K5

இவ்வலகைக் கற்றபின் நீ,

- சாதாரணமாக இயற்கை வளங்கள் மற்றும் நாகரீகமனிதனின் வாழ்க்கை எவ்வாறு மாபறியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிப்பாய்.

கீழ்க்காணும் படங்களில் நீ வாழ்வதற்கு தேவையான படங்களுக்கு வண்ணமிடுக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

கீழ்க் காணும் படங்களை கவனித்துப் பார் மக்கள் அன்றும் மற்றும் இன்றும் பயன்படுத்தும் பொருட்களில் உள்ள வேறுபாடுகளை கவனி.

	
	
	
	
	

@KTBS NOT TO BE REPUBLISHED

கீழ்க் காணும் எடுத்துக்காட்டைப் போல கோடு வரைந்து பொருத்துக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

படித்து - அறிக

மனிதர்கள் அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கங்களின் உதவியுடன் பல சாதாரண வளங்களை பயன் படுத்தக் கற்றுள்ளார்கள் எடுத்துக் காட்டாக, இயந்திரங்கள், பாத்திரங்கள், வீடுகள் கட்டுவது உலோகங்களின் பயன்பாடு: டிராக்டர்கள், லாரிகள், பஸ், நீரேற்றும் பம்புகள் போன்றவைகளுக்கு பெட்ரோல் டீசல்களின் உபயோகம், மரங்களின் கூழிலிருந்து காகிதம் தயாரித்தல் முதலியன. இதனுடன் நவீன காலத்திற்கேற்ற வெவ்வேறு விதமான இயந்திரங்கள் ஆடைகள் பாத்திரங்கள், காகிதம்..... இவ்வாறு வகை வகையான உற்பத்திப் பொருட்களை தயாரிக்க கற்றிருக்கிறார்கள். இவ்வாறு மக்கள் இயற்கை வளங்கள் மற்றும் மக்கள் ஆதரவுடன் தங்களுடைய வாழ்க்கையை அனுகூலமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளார்கள்.

செய்து பார்

1) பெரியோர்களின் உதவியுடன் மண்ணினால் பல்வேறு மாதரிகளை கீழ்க் காணுமாறு செய்து வண்ணமிடு.



©KTBS NOT TO BE REPUBLISHED

2) பல்வேறு வகையான தானியங்கள், மணிகள், வண்ணக் காகிதங்கள், துணித் துண்டுகளைப் பயன்படுத்தி பெரியவர்கள் உதவியுடன் உனக்குத் தெரிந்த மாதரிகளை தயார் செய் (படங்கள், வாழ்த்து அட்டைகள், அலங்காரப் பொருட்கள்).)

@KTBS
NOT TO BE REPUBLISHED

3) நீ பார்த்த வெவ்வேறு வகையான மண் பாத்திரங்களின் படத்தை வரைக. இவைகளை எந்தெந்த வேலைகளுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பதை படங்களுக்குக் கீழே குறிப்பிடு.

@KTBS NOT TO BE REPUBLISHED

உனக்கு தெரியுமா?

- சார்லஸ் பாபேஜ் என்னும் ஆங்கில கணித அறிவியல் அறிஞர் 1837ல் முதலாவது கணினியை தயாரித்தார் என்று கூறுவார்கள். அதனால் அநேகர் இவரை **கணினியின் தந்தை** என்று அழைக்கிறார்கள்.
- உலோகங்கள் கடினமாக இருக்கும், வளையும் தன்மை இருக்கும், உறுதியானவை, அவைகளுக்கு வெவ்வேறு உருவ அமைப்பு கொடுக்கப் படுகிறது. நன்றாக சுத்தம் செய்யலாம். உலோகங்களின் பயன்பாடற்ற செயல்கள் இல்லை என்றால் உற்பத்தியும் இல்லை.
- அமெரிக்காவின் **லிபர்டி சிலையை** செய்ய சுமார் 350,000 கிலோ கிராம் அளவு செம்பை பயன் படுத்தி தயாரித்துள்ளனர்.
- மண் பாத்திரங்களில் சமையல் செய்யும் பழக்கம் குறைந்துள்ளது. ஆனால் மண்ணால் தயாரிக்கப்பட்ட பூச்சாடிகள், கூஜாக்கள், போன்ற அலங்காரப் பொருட்கள் வீட்டை அலங்கரிக்கின்றன. இவைகளை தயாரிக்கும் விதங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

N3C1T8

அலகு - 23

ஆடை-வடிவமைப்பு

இவ்வலகைக் கற்றபின் நீ,

- ஆடைகளில் உள்ள வகைகள், துணி தயாரிப்புகளில் பயன்படுத்தும் வண்ணம் மற்றும் வடிவங்களைப் பற்றி விவரிப்பாய்.
- வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு ஆடை வடிவங்களைப் பற்றி அறிந்து கொள்வாய்.
- துணி துண்டுகளை சேகரித்து ஆடைவடிவங்களின் மாதரிகளை தயாரிப்பாய்.

பசித்தவனுக்கு உணவு
பாதுகாப்புக்கு வீடு,
ஆடை உடலுக்கு ஆதாரம்
கோடையில் மெல்லிய உடை
மழையைத் தடுக்க நுண்ணிய உடைகுளிர்
காலத்திற்கு கத கதப்பாடை
விதவித வண்ண தரதரமான
ஆடை விதவித நூலினால் நெய்யப்பட்ட
ஆடை வேண்டும் வேண்டும்
அனைவருக்கும் ஆடை.

துணி நமக்கு அவசியமானது என்பதை இப்பொழுது உணர்ந்திருப்பாய் நீ அணியும் வெவ்வேறு ஆடைகளின் பெயர்களை எழுது.



@KTBS NOT TO BE REPUBLISHED

செய்து - பார்

வெவ்வேறு நூலினால் தயாரித்த துணித் துண்டுகளை சேகரித்து ஒட்டு நூலின் வகையை அறிந்து பெயரிடுக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

விடுகதை - விடுவி

என்னை ஆட்டின் ரோமத்தால் தயாரிப்பார்கள். குளிர்காலத்தில் என்னை அணிவார்கள். நான்யார்?

கோடைக் காலத்தில் என் ஆடையையே விரும்புவார்கள் விவசாயிகள் என்னை விளைவிப்பார்கள் - அவ்வாறெனில் நான் யார்?

செய்து - பார்

1) துணி துண்டுகளை பயன் படுத்தி வெவ்வேறு மாதரியில் சிறிய ஆடைகளை தயாரித்து இங்கு ஒட்டவும்.

2) வெவ்வேறு வகையான ஆடைகளின் படங்களை சேகரித்து ஒட்டுக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

உன்னுடைய ஆடை தயாராகும் வழியைக் கண்டுபிடித்து இங்கு எழுதுக. உதவிக்காக கீழே கொடுத்துள்ள சுவடு சொற்களைப் பயன்படுத்தவும்.



குறிப்புகள்:
ஆடை, நெய்தல், பருத்தி, வண்ணம், துணி, நூல்

கீழ்க்காணும் படங்களில் உன் ஊரின் மக்கள் சாதாரணமாக அணியும் ஆடைகளுக்கு (✓) அடையாளம் இடு.

☐	☐	☐
 ☐	 ☐	 ☐
☐	 ☐	☐

© TNTBS NOT TO BE REPUBLISHED

நமது மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் மக்கள் அணியும் ஆடைகளைப் பள்ளியில் நண்பர்களுடன் மற்றும் ஆசிரியர்களுடன் விவாதிக்க.

வெவ்வேறு காலங்களில் அணியும் ஆடைகளை இங்கு எழுதுக.

மழைக்காலம் : ____________ ____________ ____________

குளிர் காலம் : ____________ ____________ ____________

கோடைக்காலம் : ____________ ____________ ____________

தைத்து அணியும் ஆடைகளுக்கு மூன்று எடுத்துக்காட்டுகளைக் கொடு.

தைக்காமல் அணியும் ஆடைகளுக்கு மூன்று எடுத்துக்காட்டுகளைக் கொடு.

செய்து-பார்

1) உனக்கு எளிதாக கிடைக்கும் இலை, காய்கறிகள், பூ, கீரைகளைக் கொண்டு (செம்பருத்தி-இலை, பூ, பீட்ரூட், மஞ்சள்) வண்ணங்கள் தயாரிக்க.

2) வெள்ளைத்துணித் துண்டின் மீது வண்ணமிடு. வடிவத்திற்காக கத்தரிக்கப்பட்ட வெண்டைக்காய், முள்ளங்கி, பூகோஸின் துண்டுகள் முதலியன வற்றை பயன் படுத்திக் கொள்ளலாம்.

3) ஒரு துணியில் ஒரு நாணயத்தை கெட்டியாகக் கட்டி வண்ண நீரில் மூழ்க வைக்கவும் உலர்ந்த பின் பிரித்துபார்.



NOT TO BE REPUBLISHED ©KTBS

4) நான்கைந்து வகையான வண்ணங்களை நீரில் போட்டு துணி அல்லது காகிதத்தை மூழ்கவைத்து உடனே எடுத்து விடுக. அதனை எச்சரிக்கையுடன் தொங்கவிட்டு உலரவைத்துப் பார்க்க.





5) வெள்ளைத் தாளின் மீது உன்னுடைய பெருவிரலை வண்ணத்தில் ஒற்றி எடுத்து படத்தைத் தயார்செய்க.



6) வெள்ளைத் தாளின் மீது வண்ணமிட்ட பருத்தியினால் படங்களை செய்.



NOT TO BE REPUBLISHED

நீ அறிவாயா?

- முதன் முதலில் ஆடைகள் தோல், இலைகள், புற்களினால், தயாரிக்கப் பட்டன.
- தாவர நார்களினால், பட்டு, நைலான் என பல்வேறு வகை நூல்கள் உள்ளன. இவைகளால் பல் வேறு வகையான துணிகள் தயாரிக்கப் படுகின்றன. இந்த துணிகள் தாவரங்கள் மூலம் மற்றும் இரசாயனங்கள் மூலம் தயாரிக்கப் படுகின்றன, வண்ண மிட்டு அழகு செய்யப்படுகின்றன. மனிதர்கள் நாகரீகம் உள்ளவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு.
- இந்தியாவில் கருநாடகமே அதிகளவில், பட்டு உற்பத்தி செய்கின்ற நாடாகும். இந்தியாவில் உற்பத்தியாகும் பட்டில் 70% கருநாடகத்தில் உற்பத்தியாகிறது. பெங்களூரு கிராமிய மாவட்டத்திலும் மைசூரு மாவட்டத்திலும் அதிகளவில் பட்டு உற்பத்தியாகிறது.
- ஒரு வகையான புழுவின் நீர்மமே பட்டு, இத்தகைய நீர்மத்தை சுரக்கும் பூச்சிகளே பட்டுப்புழுக்கள்.
- பாகல் கோட்டை மாவட்டத்தில் இளக்கல் என்னும் ஊரில் தயாரிக்கப்படும் சேலைகள் உலகப் புகழ் வாய்ந்தவை.
- கருநாடகமாநிலத்தின் சாம்பிரதாயமான உடை.

  ஆண்களின் ஆடைகள் : வேட்டி, சட்டை, அங்க வஸ்த்திரம்.

  பெண்களின் ஆடைகள் : சேலை, ரவிக்கை அல்லது பாவாடை, தாவனி, ரவிக்கை.

© KTBS NOT TO BE REPUBLISHED

R2H8Z7

அலகு - 24

மேகத்தின் பயணம்

இவ்வலகைக் கற்றபின் நீ,

- பூமி அனைவரின் வாழிடம். இங்கு வாழ்வதற்குத் தேவைப்படும் காற்று, மண், நீர் உள்ளது என்று போற்றுவாய்.
- காற்று மற்றும் மண்ணின் முக்கியத்துவத்தை அறிவாய்.
- காலமாற்றங்களை அடையாளம் காண்பாய்.

@KTBS NOT TO BE REPUBLISHED



NOT TO BE REPUBLISHED @KTBS







©KTBS
NOT TO BE REPUBLISHED



© KTBS NOT TO BE REPUBLISHED



குன்றுகள்	மலைகள்



@KTBS
NOT TO BE REPUBLISHED

மேகண்ணனின் பயணத்தை படித்தாய் அல்லவா? மேகண்ணன் சொன்ன சமுத்திரம், கடற்கரை, பாலைவனம், சமவெளி, பீடபூமிகள், மலைகள், குன்றுகள் போன்றன நமது பூமியின் மீதுள்ளன. இவைகளில் சில உன்னுடைய சுற்று முற்றிலும் இருக்கலாம். அடையாளம் காண்!.

இவைகளுக்கு விடை எழுதுக. (மேகண்ணனின் உதவியைப் பெற்றுக் கொள்)

1. குன்றுகள் கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்திலிருக்கும்?

____

2. குன்றுகளின் இடையில் காணப்படும் ஆழமான பிரதேசத்தை எந்த பெயரைக் கொண்டு அழைக்கிறார்கள்?

____

3. நமது மாநிலத்தில் மூன்று புகழ்பெற்ற நீர் வீழ்ச்சிகளின் பெயர்களை எழுது. (ஆசிரியர்/பெரியவர்கள் உதவியைப் பெறு).

____

4. வளமான மண்ணை எங்கு காணலாம்?

____

நீ அறிந்து கொண்ட வெவ்வேறு விதமான பூமியின் வடிவங்களில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், வெவ்வேறு வகையான தாவரங்கள் உள்ளன. இவை பூமியின் மீது வாழ்வதற்கு காற்று, நீர் மற்றும் மண் மிகவும் அவசியம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

காற்று

பூமியின் மேலுள்ள உயிரிகள் வாழ்வதற்கு காற்று வேண்டும் என்பது உனக்குத் தெரியும்.

படத்தைப் பார். தொழிற்சாலைகள் வாகனங்கள் புகையை வெளியில் விடுகின்றன. இப்புகை காற்றுடன் சேர்ந்து அதனை மாசடையச் செய்கிறது. மாசடைந்த காற்றை சுவாசிக்கும் போது நோய்கள் வருகின்றன என்பதை அறிந்துகொள்.

காற்று மாசு அடையாமல் தடை செய்வது எவ்வாறு? நான்கு வரிகள் எழுது ஆசிரியர்/ பெரியவர்கள் உதவியைப் பெறு.

____

____

____

____

நீர்

உயிரினங்களுக்கு நீர் மிகவும் அவசியம். நீர் மற்றும் நீரின் அவசியத்தைப் பற்றி தற்போது அறிந்திருப்பாய்.

படத்தைப் பார், தொழிற்சாலைகளின் கழிவு நீர், சாக்கடைகளின் நீர் போன்றவை நீர் மூலங்களை அடைகிறது. சிலர் தம்முடைய வாகனங்களை ஆற்று நீரிலேயே கழுவுகிறார்கள். சிலர் துணிகளை துவைக்கிறார்கள், பாத்திரப் பண்டங்களைக் கழுவுகிறார்கள். இதனால் நீர் மாசடைகிறது. மாசடைந்த நீர் உபயோகத்திற்கு ஏற்றதல்ல.

நீர் மாசடையாமலிருக்க நீ எடுக்கும் நடவடிக்கைகளை இங்கு எழுது.

____

____

____

மண்

உயிரினங்களின் வாழ்க்கைக்கு மண் மிகவும் முக்கியமானது. தாவரங்கள் வளர, வீடுகட்ட, செங்கற்கள் தயாரிக்க, முதலிய வேலைகளுக்கு மண் தேவைப்படுகிறது.

பிளாஸ்டிக் பொருட்களின் அதிகளவு பயன்பாடு, வயல்களுக்கு அதிகளவில் இரசாயன எருக்கள் பயன் படுத்துதல் போன்றவைகளால் மண் மாசடைகிறது.

மண் மாசடைவிதை எவ்வாறு தடுப்பாய்? இரண்டு வரிகளில் எழுதுக.

____

____

உன்னைச் சுற்றியுள்ள காற்று, நீர் மற்றும் மண் மாசடையாமல் இருக்க எச்சரிக்கைக் கொள். இதனைக் காப்பாற்ற தேவையான செயல்களை அறிந்து கொள். இச்செயல்களை அனுசரித்து இந்த அரிய நில வளங்களை காப்பாற்றிக் கொள். ஏனேன்றால் இவை நாம் மற்றும் மற்ற உயிரிகள் வாழ்வதற்கு மிகவும் அவசியம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வானிலை மற்றும் தட்ப வெப்ப நிலை

கீழ்க் காணும் படங்களை கவனி, சரியான வாக்கியங்களை படங்களுடன் பொருத்துக.

அ	ஆ
	காற்று வீசுதல்
	வெயில் அதிகமாக உள்ளது
	மேகம் சூழ்ந்துள்ளது
	மழை வருகிறது

மேற் காணும் படங்களில் ஒரு நாளில் ஏற்படும் வானிலை மாற்றங்களைக் காட்டுகின்றன. இதற்கு வானிலை என்று அழைக்கிறார்கள். இதைப் பற்றி கடந்த வகுப்பில் கற்ற அம்சங்களை நினைவுப்படுத்திக் கொள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

படித்து - அறிக

ஒரு நாளில் அல்லது, நாளுக்கு நாள் வானிலை மாறுபடுகிறது. ஒரு பிரதேசத்தின் வானிலையை சுமார் முப்பது முதல் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை பரிசீலிக்கிறார்கள். இந்த நீண்டகால வானிலையின் மொத்தமே தட்ப வெப்பம்.

தட்பவெப்ப நிலைக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் தொடர்பு உள்ளது. மக்களின் நடை, உடை, வீடுகட்டும் விதம், தொழில், விளைப் பொருடகள், எல்லாம் அந்தந்த பிரதேசத்தின் தட்ப வெப்பநிலையை ஆதாரமாகக் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக அதிகமழைப் பெய்யும் பிரதேசங்களில் சரிவான கூறைகள் காணப்படுகிறன்றன. அதிக வெயில் குறைந்த மழைப் பொழியும் இடங்களில் சோளம், கேழ்வரகு (ராகி) போன்ற விளைப் பொருட்கள் அதிகமாக விளைவிக்கப் படுகின்றன.

வானிலை மற்றும் தட்ப வெப்ப நிலை இவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை எழுது.

வானிலை	தட்ப வெப்ப நிலை

ஏப்ரல், மே மாதங்களில் உன் பள்ளிக்குக் கோடை விடுமறை இருக்கும். அந்நாட்களில் உன் ஊரின் வானிலை எவ்வாறுள்ளது. கோடை விடுமுறைக்குப் பிறகு உன் பள்ளி மறுபடியும் தொடங்கும் போது வானிலை எப்படி உள்ளது. வானிலை மாறுதல்களால் காலங்கள் அல்லது பருவங்கள் உண்டாகின்றன. மூன்று காலங்களை அடையாளம் காணலாம்.

1. கோடைக்காலம் 2. மழைக் காலம் 3. குளிர்க்காலம்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

இங்கு சில சூழ்நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன அவை எக்காலத்துக்கு தொடர்புள்ளவை என்பதை எழுது.

வரிசை எண்	சந்தர்பங்கள்	தொடர்புடைய காலம்
1.	தண்ணீரில் குளிப்பது	
2.	கம்பளி ஆடைகள் அணிந்து வெதுவெதுப்பாக இருப்பது.	
3.	மின் விசிறியின் கீழ் அமர்ந்து கொள்ள விரும்புவது.	
4.	மழைக்கோட் அணிந்து கொள்வது.	
5.	மரங்கள் இலைகளை உதிர்ப்பது	
6.	குடையைப் பயன் படுத்துவது.	

NOT TO BE REPUBLISHED
@KTBS

கோடைக் காலத்தில் வெயில் அதிகம். நீ அணியும் ஆடையில், உண்ணும் உணவில் மாற்றங்கள் இருக்கும், கவனி.

கோடைக்காலத்தில் நீ எத்தகைய உணவை உண்பாய்?

____

____

கோடைக்காலத்தில் எத்தகைய உடைகளை அணிவாய்.

____

____

மழைக் காலத்தில் எங்கு பார்த்தாலும் நீர் இருக்கும். மக்கள் குடைகளைப் பிடித்துக் கொண்டுச் செல்வார்கள். மழைக்கால நிலைமையைக் கவனி. ஆகாயத்தில் அவ்வப் பொழுது மின்னும் மின்னலை நீ பார்த்திருப்பாய் மின்னல் வந்த சில வினாடிகளில் இடி இடிக்கும், ஒலிகேட்கும். ஏன், என்று ஆசிரியரைக் கேட்டு அறிந்து கொள்க.

படத்தைக் கவனித்துப் பார். இதன் பெயரை இங்கு எழுதுக.

வானவில் எப்பொழுது காணப்படுகிறது?

வான வில்லில் எத்தனை நிறங்கள் உள்ளன, உன்னால் கூற முடியுமா? அவைகளின் பெயர்களை இங்கு எழுதுக.

குளிர் அதிகமாகும் காலமே குளிர்க்காலம். இக்காலத்தில் மக்கள் வெது வெதுப்பான ஆடைகளை அணிவார்கள். மரங்கள் குளிர்க்காலத்தில் இலைகளை உதிர்க்கின்றன.

குளிர்க்காலத்தில் நீ உண்ணும் உணவுப் பண்டங்களைப் பட்டியலிடு.

©KTBS NOT TO BE REPUBLISHED

கோடைக் காலம், மழைக்காலம், மற்றும் குளிர்க்காலங்களில் மக்களிடையே மாறுதல்கள் ஏற்படுகின்றன. உடுப்பது - தொடுப்பது, விளைப் பொருட்கள், உணவை உண்பதின் மீது விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை அறிந்து கொள்க.

நீ அறிவாயா?

- இமயமலைத் தொடர் 2400 கி.மீ. நீளமாக உள்ளது. இது பனியால் மூடப்பட்டுள்ளது.
- கணவாய்கள் 'V' அல்லது 'U' வடிவத்திலிருக்கும்.
- திபெத் பீடபூமியை உலகின் மேற்கூறை என்பார்கள்.
- நதிகள் பாய்ந்து, கொண்டு வரும் மண்ணை வண்டல் மண் என்பார்கள்.
- இந்தியாவின் மேற்கு பகுதியில் **தார் பாலைவனம்** உள்ளது.
- முள்ளையன கிரி, கருநாடகத்தின் மிக உயரமான சிகரம் இது கடல் மட்டத்தை விட சுமார் 1925 மீட்டர் உயரத்தில் உள்ளது.
- மாசடைந்த காற்றை சுவாசிப்பதினால் சுவாசத் தொடர்பான நோய்கள் வரும்.
- இந்தியாவிற்கு மும்மாரி மழைக் காற்றுகள் மற்றும் பின்மாரி மழைக் காற்றுகள் மழையை அளிக்கின்றன.
- பூமியின் மேல் பாகத்தில் பாதிக்கு மேல் சமவெளிப் பகுதிகள் உள்ளன.
- காஷ்மீர் வட இந்தியாவின் ஒரு மலைப் பிரதேசமாகும்.
- வான வில்லின் நிறங்களை நினைவு கூற ஆங்கில மொழியின் ஒரு பதமே VIBGYOR இவ்வெழுத்துக்கள் வண்ணங்களின் முதல் எழுத்து க்களைக் காட்டுகின்றன.

V	-	Violet	-	ஊதா;
I	-	Indigo	-	சாம்பல்
B	-	Blue	-	நீலம்
G	-	Green	-	பச்சை,
Y	-	Yellow	-	மஞ்சள்
O	-	Orange	-	ஆரஞ்சுநிறம்,
R	-	Red	-	சிவப்பு

NOT TO BE REPUBLISHED ©KTBS

அலகு - 25

நமது மாநிலம் - நமது பெருமை

M8J7S8

இவ்வலகைக் கற்றபின் நீ,

- இந்திய வரைபடத்தில் கருநாடகத்தை அடையாளம் காண்பது. கருநாடக மாநிலத்தின் இயற்கைப் பிரிவுகளை அறிமுகம் செய்து கொள்வாய்.
- நமது மாநிலத்தின் வரலாறு, புகழ்வாய்ந்த கோடை வாழிடங்கள் அவைகளின் முக்கியத்துவம் பற்றி அறிவது. காப்பாற்றும் வழிமுறைகளை வளர்த்துக் கொள்வாய்.

பல மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து ஒரு மாநிலமாகிறது என்று உனக்குத் தெரியும். இவ்வாறான பலமாநிலங்கள் ஒன்று கூடி ஏற்பட்ட நிலப்பகுதியே நாடு. இந்தியா நமது நாடு இதனை பாரதம் என்றும் அழைப்பார்கள். கீழ்க்காணும் படத்தை கவனி இது பாரத நாட்டின் வரைப்படம்.



NOT TO BE REPUBLISHED @KTBS

இந்தியாவில் உள்ள மாநிலங்களின் பெயர்களைப் பட்டியலிட்டு வரை. வரைப்படத்தின் உதவியைப் பெறுக

வரிசை எண்	மாநிலங்களின் பெயர்கள்

@KTBS
NOT TO BE REPUBLISHED

- இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை ____________________
- இந்தியா வரைப்படத்தில் கருநாடக மாநிலம் அமைந்திருக்கும் திசை ____________________

கருநாடகம் நமது மாநிலம், இதில் 31 மாவட்டங்கள் உள்ளன. கடந்த வகுப்பில் உனது மாவட்டம் மற்றும் சுற்றிலும் உள்ள மாவட்டங்களின் சிறு அறிமுகம் செய்து கொண்டிருப்பாய்.

ரமேஷ் கருநாடகத்தின் அண்டை மாநிலங்கள் மற்றும் அவைகளின் திசைகளை எழுதியுள்ளான். படத்தை கவனித்துப்பார்த்து தவறுகள் இருந்தால் சரியான விடையைத் திருத்தி எழுது.

கிழக்கு - மகாராஷ்ரம் :________________

மேற்கு - ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்காணா :________________

தெற்கு - கேரளமாநிலம் மற்றும் தமிழ்நாடு :________________

வடக்கு - கோவா :________________

ஒவ்வொரு மாநிலத்திலும் சிறப்பான நில அமைப்புகள் உள்ளன. (எ-டு) மலை, கடற்கரைப் பிரதேசம், பல்வேறு நில அமைப்புகள், பற்றி ஏற்கனவே அறிந்துள்ளாய் நில அமைப்புகள் மற்றும் காலநிலை அடிப்படையில் நமது மாநிலத்தில் நான்கு முக்கியமான இயற்கைப் பகுதிகள் உள்ளன. அவை அடையாளம் காணப்பட்டுள்ளன.



© KTBS NOT TO BE REPUBLISHED

நான்கு இயற்கைப் பிரதேசங்கள் அல்லது இயற்கைப் பகுதிகளில் வரும் மாவட்டங்களின் பெயர்களை கீழே எழுது.

1. மேற்கு கடற்கரை மாவட்டங்கள்:

____

2. மலை நாட்டின் மாவட்டங்கள்:

____

3. வடக்கு சமவெளிப்பிரதேச மாவட்டங்கள் :

____

4. தெற்கு சமவெளிப் பிரதேச மாவட்டங்கள் :

____

படத்தை கவனி, மேற்கு கடற்கரைப் பிரதேசத்தைப் பற்றி அறி.



@KTBS NOT TO BE REPUBLISHED

விடையளி

மேற்கு கடற்கரைப் பிரதேசத்திற்கு உள்ள மற்றொரு பெயர் யாது?

____

மேற்கு கடற்கரைப் பிரதேச மக்களின் முக்கியத் தொழில்கள் யாவை?

____

பொருத்துக.

அ	ஆ
காடுகோழி	முக்கிய நகரம்
ஷார்க்	தாதுப் பொருள்
பாக்கு	பறவை
இரும்பு	விளைப்பொருள்
கார்வார்	கடல் உயிரினம்

மலைநாட்டு பிரதேசத்தைப் பற்றி இப்படத்தில் கொடுக்கப் பட்டுள்ளது கவனி:



©KTBS NOT TO BE REPUBLISHED

மலை நாட்டுப் பிரதேசத்தைப் பற்றி அறிந்துள்ளாய். இவைகளை பொருத்தி எழுது.

அ	ஆ
சயாத்ரி	ஆபுர்வ விலங்கு
மங்கனீஸ்	மாநில மரம்
சந்தனம்	கனிப் பொருள்
காடுபாப்பா	மலைகளின் தொடர்.

மலை நாட்டுப் பிரதேசத்திற்கு தொடர்புள்ள கீழ்க் காண்பவைகளை பட்டியலிடு

முக்கிய மரங்கள்	விளைப் பொருட்கள்	முக்கிய நகரங்கள்

நமது மாநிலத்தின் மற்றொரு இயற்கைப் பகுதியே வடக்கு சமவளிப் பிரதேசம். கீழ்க்காணும் படத்தில் அதனைப் பற்றி கொடுக்கப் பட்டுள்ளதை கவனி.



விடையளி

வடக்கு சமவெளி பிரதேசத்தில் எவ்வகையான காடுகள் காணப்படுகின்றன?

____

வடக்கு சமவெளி பிரதேசத்தின் மக்களின் முக்கியத் தொழில்கள் யாவை?

____

வடக்கு சமவெளி பிரதேசத்திற்கு தொடர்புடைய கீழ்க்காண்பவைகளைப் பட்டியலிடவும்.

முக்கிய கனி வளங்கள்	
முக்கிய விலங்ககுகள்	
முக்கிய விளைப் பொருட்கள்	

தெற்கு சமவெளிப் பிரதேசம் நம்முடைய மாநிலத்தின் நான்காவது இயற்கைப் பகுதியாக உள்ளது. கீழ்க்காணும் படத்தை கவனமாகப் பார்க்கவும்.



NOT TO BE REPUBLISHED © KTBS

தெற்கு சமதரைப் பிரதெசத்திற்கு தொடர்புடைய சொற்களில் எது தவறு என்று குறிப்பிடவும். தவறாக உள்ளதைத் திருத்தி எழுது.

- தெற்கு சமவெளிப் பிரதேசம் சமமாக உள்ளது ____________
- இங்குள்ள விலங்கு கழுதைப் புலி ____________
- மீன் பிடித்தல் இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில் ____________
- அப்ரகம் இப்பிரதேசத்தில் கிடைக்கும் ஒரு முக்கிய கனிப்பொருள் ________

செய்து பார்

தெற்கு சமவெளிப் பிரதேசத்தில் காணப்படும் முக்கிய மரங்கள் மற்றும் காட்டு விலங்குகளின் படங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

நதிகள்

நமது மாநிலத்தில் பல நதிகள் உள்ளன. அவைகளில் சில மேற்கு முகமாகவும். இன்னும் சில கிழக்கு முகமாகவும் பாய்கின்றன. கீழ்க்காணும் நதிகள் நமது மாநிலத்தில் பாயும் நதிகளின் பட்டியல் அளிக்கப் பட்டுள்ளது. ஆசிரியரின் உதவியைப் பெற்று மேற்கு நோக்கி பாயும் நதிகள் கிழக்கு நோக்கி பாயும் நதிகளைப் பிரித்து எழுதுக.

கிருஷ்ணா, கட்டபிரபா, ஷராவதி, காளி, மலப்பிரபா, பீமா, அகநாசினி, துங்கபத்திரா, காவேரி, நேத்ராவதி, ஹேமாவதி, கபினி.

மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்	கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்

ஆசிரியர்/பெரியவர்கள் உதவியுடன் அறிந்து கொள்.

கருநாடகத்தின் ஜீவநதி (வற்றாத நதி) ____________

கருநாடகத்தின் மிகவும் நீளமான ஆறு ____________

சுற்றுலாத்தலங்கள்

நமது மாநிலத்தில் பல சுற்றுலாத்தலங்கள் உள்ளன. இதனால் சுற்றலாவினர் மாநிலத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் வருகின்றனர். அவைகளில் சில முக்கிய நகரங்கள். வரலாற்றுச் சிறப்புடைய இடங்கள் மற்றும் இயற்கை வாழிடங்கள் பற்றிய விவரங்கள் அளிக்கப் பட்டுள்ளன கவனி.

பெங்களூரு: பெங்களூரு நமது மாநிலத்தின் தலைநகரம் விதான சவுதா, விக்காஸ் சவுதா, உயர் நீதி மன்றம், விசுவேஸ்வரய்யா கைத்தொழில் மற்றும் தொழில் நுணக்க பொருட்காட்சிசாலை, வெங்கட்டப்பா கலைப் பள்ளி, திப்புவின் கோடை அரண்மனை, ஜவகர்லால் நேரு கோளரங்கம், லால்பாக் மற்றும் கப்பன்பார்க் முதலியன முக்கியமாக மக்களைக் கவரும் இடங்களாகும்.

மைசூரு : விளக்குகளை அலங்காரமாகக் கொண்டுள்ள அரண்மனை, சாமுண்டி மலை, விலங்கு காட்சி சாலை, இவைகள் மைசூரில் பார்க்கத் தக்க இடங்கள், மைசூரின் **தசராப் பண்டிகை கொண்டாட்டங்கள்** உலக புகழ் பெற்றன.

உனது மாவட்டத்தின் முக்கிய நகரத்தைப் பற்றி நான்கு வரிகள் எழுது.

____

____

____

____

நமது மாநிலத்தின் வரலாற்றுத் தொடர்புடைய முக்கிய இடங்களே வரலாற்று புகழ் பெற்ற இடங்கள்.

ஹம்பி

படத்தைப் பார் இது நமது மாநிலத்தின் வரலாற்று புகழ் பெற்ற இடம். ஹம்பியில் உள்ளது கல் தேர். ஹம்பி விஜய நகர மாவட்டத்திலுள்ளது. ஹம்பி முன்பு விஜய நகர சம்ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது. இங்குள்ள சிற்பக்கலை உலக புகழ் பெற்றது. விருபாக்ஷ ஆலயம், கமல மகால் ஹஜார ராமசாமி ஆலயம் இவ்வாறு பல ஆலயங்களில் செதுக்கு வேலைகள் காண அழகாக இருக்கும்.

கீழ்க்காணும் பட்டியலில் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் மேலும் அவை உள்ள மாவட்டங்கள் தரப்பட்டுள்ளன.

இவைகளை பொருத்தி எழுது

அ	ஆ
1. ஹளே பீடு	பாகல் கோட்டை
2. பாதாமி	விஜயாபுர
3. கோல்கும்பஸ்	ஹாசன்
4. கற்கோட்டை	தென் கன்னடம்
5. சுல்தான் பத்தேரி	சித்ரதுர்கா

@KTBS NOT TO BE REPUBLISHED

உன்னுடைய ஊரில் அல்லது மாவட்டத்தில் ஏதாவது வரலாற்றுப்புகழ் மிக்க இடங்களிருந்தால் அவற்றைப் பற்றி நான்கு வரிகள் எழுது.

நமது மாநிலத்தில் சில இடங்கள் இயற்கையழகுடன் கூடியன சுற்றுலாப் பயணிகளை கவரும். இவையே இயற்கை வாழிடங்கள்.



© KTBS NOT TO BE REPUBLISHED

நந்திமலை, பாபாபுடன் கிரி (இனாம் தத்தாத்ரேயா பீடா), முள்ளய்யன கிரி, கெம்மன குன்டி குதிரை முகம், கூட சாத்ரி இவை முக்கிய மலை வாழிடங்கள்.

படித்து - அறிக

- மலை வாழிடங்களில் உள்ள குளிர்ச்சியான காற்று, அழகுபொங்கும் இடங்களைக் காண மக்கள் இங்கு வருகிறார்கள்.
- உள்ளால, மங்களூரு, மல்பே, கார்வாரில் அழகான கடற்கரைப் பகுதி, சிவமொக்கா மாவட்டத்தின் கோக்காக் நீர்வீழ்ச்சி மண்டியா மாவட்டத்தின் சிவசமுத்திரம் பௌகாவி மாவட்டத்தின் கோக்காக் நீர்வீழ்ச்சி முதலியன கண்களுக்கு விருந்தளிக்கின்றன.
- பன்டிப்புரா, நாகரஹொளே சரணாலயம், ரங்கனதிட்டு கொக்கரே பெள்ளூரின் பறவைகள் சரணாலயம், முதலியன மக்களைக் கவரும் முக்கியமான இடங்கள். பள்ளாரி மாவட்டத்திலுள்ள தரோஜி கரடிகள் வாழிடம், புகழ் பெற்றுள்ளன.

நீ அறிந்துள்ள நம்முடைய மாநிலத்தில் பார்க்க வேண்டிய இடங்கள் பட்டியலில் உள்ளன பிரித்து எழுதுக.

நீர் வீழ்ச்சிகள்	பறவை சரணாலயங்கள்	சரணாலயங்கள்	கடற் பிரதேசங்கள்

வரலாற்றுப்புகழ் பெற்ற இடங்கள், இயற்கை வாழ் இடங்கள் நமது மாநிலத்தின் பெருமையின் அடையாளங்கள். அவைகளை காப்பாற்றுவது நம்முடைய கடமை கீழ்க்காண்பவைகளில் எது சரி, எது தவறு அடையாளம் காண்.

வ.எண்	விவரங்கள்	சரி	தவறு
1.	வரலாற்றுப் புகழ் பெற்ற சின்னங்களின் மீது கல்லினால் அல்லது வண்ணங்களால் பெயர் எழுதுவது.		
2.	பறவை சரணாலயங்களில் அமைதியாக இருப்பது.		
3.	வரலாற்று சிறப்புடைய இடங்களைக் காணவரும் சுற்றுலாவினருக்கு தொந்தரவு அளிப்பது.		
4.	இயற்கை வாழிடங்களில் விலங்குகளை வேட்டையாடுவது.		
5.	வரலாற்று புகழ் இடங்களின் அருகில் கண்ட இடங்களில் மலம், மூத்திரம் கழிப்பது.		

@KTBS NOT TO BE REPUBLISHED

வரலாற்று சிறப்புடைய இடங்கள் இயற்கை வாழிடங்கள் மற்றும் காட்டுப்பகுதிகளை காக்க நீ என்ன செய்வாய் என்பதை உன் நண்பர்களுடன் விவாதிக்கவும்.

செய்து - பார்

தினசரி பத்திரிக்கைகளில் வரும் வரலாற்று சிறப்புடைய படங்களை சேகரித்து இங்கு ஒட்டு.

@KTBS
NOT TO BE REPUBLISHED

உனக்கு விருப்பமான எதாவது பார்க்கதகுந்த இடத்தைப் பற்றி நான்கு வரிகள் எழுது.

____

____

____

____

நமது மாநிலம் சிறப்புகளுடன் கூடியது. நமது நாட்டின் முக்கிய முதன்மை மாநிலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்வளவு வளமான மற்றும் அழகான மாநிலம் உன்னுடையது என்னும் பெருமை உனக்கிருக்கட்டும்.

நீ அறிவாயா?

- *2014ல் ஆந்திர மாநிலத்தை **ஆந்திர பிரதேசம்** மற்றும் **தெலங்காண** என இரண்டு மாநிலங்களாக பிரித்துள்ளனர்.*
- *2019 இல் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என்ற பெயரில் இரண்டு ஒன்றியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன.*
- காவேரி ஆறு குடகு மாவட்டத்தில் பிரம்மகிரி மலையில் தலைக் காவேரியில் பிறக்கிறது.
- பெங்களூரு தகவல் தொழில் நுட்பத்திற்குப் பெயர் பெற்றது. அதனால் இதனை '**சிலிகான் சிட்டி**' என்று அழைக்கிறார்கள்.
- ஆசியா கண்டத்திலேயே முதன் முதலாக 1902ல் மண்டியா மாவட்டத்தில் சிவன சமுத்திராவில் மின்சாரம் உற்பத்தி தொடங்கப் பட்டது.
- இந்தியாவிலேயே மிக உயரமான **ஜோக் நீர்வீழ்ச்சி** கருநாடக மாநிலத்திலுள்ள சிவமொக்கா மாவட்டத்தில் உள்ளது.
- மேற்கு கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் **செயின்ட் மேரி** அல்லது **தோன்செபார் தீவு ஆறு** கோணங்கள் உருவம் கொண்ட பாறைத் தளத்தைக் கொண்டுள்ளது.
- **ஹம்பி** மற்றும் **பட்டதக்கல்**-இவை உலகப் பரம்பரை பட்டியலில் இடம் பெற்றுள்ள புகழ்பெற்ற வரலாற்றுத் தலங்களாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED